a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

மே 2020 May | இதழ் 352 ISSUE





# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

**Premier Canadian Tamil Journal**

## Covid - 19 can be deadly



**STOP THE SPREAD**

**Stay Home : Save Lives**

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம்-1991

30 வது ஆண்டில் th Year

Growing with the Community ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு
முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமாரதாஸன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்:
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# இதுவும் கடந்து...!

எங்கு பார்த்தாலும் கொரோனா பற்றியே பேச்சு. எவரோடு உரையாடினாலும் கொரோனா பற்றியே அலசல். எந்த ஊடகமானாலும் கொரோனா பற்றியே செய்தி. கொரோனா இப்போது உயிர்மூச்சாக உலகை ஆட்டிக் கொண்டிருக்கிறது.

உலக ஒழுங்கை நான்கைந்து மாதங்களுக்குள் கொரோனா தலைகீழாக மாற்றிவிட்டது. இன்றிருப்பவர் யார் நாளை இருப்பாரெனத் தெரியாது ஒவ்வொருவரும் நிலைகுலைந்து நிற்கின்றனர்.

கொள்ளை, கோதாரி, பிரளயம் என்று கேள்விப்பட்ட பல சொற்களின் அர்த்தத்தை இன்று அனுபவ ரீதியாக மனிதகுலம் அறிந்து உணர்ந்து கொண்டிருக்கிறது. நாடு, இனம், மொழி, நிறம், சாதி, பால் என்ற வேறுபாடின்றி எல்லோரும் ஒரே குலம் என்பதை கொரோனா நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞானம் அதியுச்சம் பெற்ற காலத்தில் ஒரு நோயினால் மருந்தின்றி மனிதகுலம் மாளும் நிலை வருமென யாருமே கனவு கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் அது வந்துவிட்டது. இதற்கான மருந்தை எவராலும் ஏனோ கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நான்கு மாதங்களில் எங்களுக்குத் தெரிந்த எத்தனையோ பேரை இழந்துவிட்டோம். எம்மோடு தொடர்பில் இருந்த எத்தனையோ பேர் மரணத்தைத் தழுவி விட்டனர். இதற்கான எண்ணிக்கை எவரிடமும் சரியாக இல்லை. அல்லது எந்த நாட்டினாலும் சரியான எண்ணிக்கையைப் பெற முடியவில்லை.

பிரித்தானியாவிலும் கனடாவிலும் மரணித்தோரில் மூத்தோரே அதிகம். இத்தாலியில் முதலாம் தலைமுறை இல்லாமல் போய்விட்டது என்றாகிவிட்டது.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழரான மருத்துவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியியலாளர்கள், சமூகப் பணியாளர்கள் என்று பல்துறை சார்பினர் இந்நோய்க்காளாகி விட்டனர். பலரை இழந்து விட்டோம்.

இடர்வரும்போதெல்லாம் இடைவிடாது உதவிக் கரம் நீட்டிய புலம்பெயர் உறவுகளின் இழப்புக்கண்டு தாயகத் தமிழர் கவலை கொண்டிருப்பதை அங்கிருந்து வருகின்ற அறிக்கைகள் வாயிலாக அறிய முடிகிறது.

இன்றைய நிலைமையே இப்படியென்றால்... கொரோனா அதன் இரண்டாம் சுற்றுக்குத் தயாராகி வருவதாகக் கிடைக்கின்ற தகவல் பெரும் அச்சத்தை ஊட்டுகிறது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தை அடுத்து ஏற்பட்டதிலும் அதிகமான உணவுப் பஞ்சம் ஏற்படப்போவதாக முன்னெச்சரிக்கை வந்துள்ளது. சர்வதேசத்திலும் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படப்போவதாகவும் வேலையின்மையால் மக்கள் அவதிப்படப் போவதாகவும் மற்றொரு அறிக்கை வந்துள்ளது.

கொரோனாவின் முடிவில் புதியதொரு உலகம் உருவாகப் போகிறதா? அப்போது அதிகாரப் போட்டியில்லாத முகமூடி அரசியல்வாதிகள் இல்லாத உலகத்தைக் காண முடியுமா? இதுவும் கடந்து...!

திரு எஸ். திருச்செல்வம்

TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Public Relation
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website:
www.tamilsinformation.info

# NO
## Immunity Passport!
## Continue
## Social Distancing!

The World Health Organization is warning that people who have had Covid-19 are not necessarily immune by the presence of antibodies from getting the virus again.

"There is no evidence yet that people who have had Covid-19 will not get a second infection," WHO said in a scientific brief published . It cautions against governments that are considering issuing so-called "immunity passports" to people who have had Covid-19, assuming they are safe to resume normal life.

"At this point in the pandemic, there is not enough evidence about the effectiveness of antibody-mediated immunity to guarantee the accuracy of an 'immunity passport' or 'risk-free certificate,' " WHO said. Dr. Maria Van Kerkhove from WHO has previously said it's not known whether people who have been exposed to the virus become completely immune. The new WHO brief underscores that stance, and jibes with other scientific statements about the idea of developing immunity. The Infectious Diseases Society of America warned that not enough is known about antibody testing to assume immunity.

Dr. Mary Hayden, spokesperson for IDSA and chief of the Division of Infectious Diseases at Rush University Medical Center, said, "We do not know whether or not patients who have these antibodies are still at risk of reinfection with Covid-19. At this point, I think we have to assume that they could be at risk of reinfection."

"We don't know even if the antibodies are protective, what degree of protection they provide, so it could be complete, it could be partial, or how long the antibodies last," Hayden added, "We know that antibody responses wane over time."

The society is "recommending that people with antibodies not change their behavior in any way, continue social distancing etc. And we think that this is a really important point to emphasize because we're concerned that if this could be present, that these antibodies could be misinterpreted, people could put themselves at unnecessary risk," Hayden said.

# கொரோனாவின் பிறப்பிடம் எது? நிவாரணம் தண்டனையாகுமா? இடர்கால பட்டிமன்ற கேள்விகள்!

மனித உயிர்களை காவு கொள்ளும் கொரோனா என்ற கோவிட்-19 நோய் இந்த மாதத்தில் மேலும் வேகம் கொண்ட பின்னரே சரிவு நிலைக்குச் செல்லுமென சர்வதேச மருத்துவ வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்நோயின் இலக்கு (பலி) என்னவென்பதை எவராலும் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்து எத்தனையோ மாதங்களின் பின்னர்தான் சரியான எண்ணிக்கை வெளிவரக்கூடும்.

நோயின் தாக்கத்தையும் தார்ப்பரியத்தையம் புரியாமலோ என்னவோ சில அரசியல் தலைவர்கள் இதிலும் பிழைப்பு நடத்துகின்றனர். அதேசமயம் அப்பாவிப் பொதுமக்கள் சிலர் தங்களின் குழந்தைகளுக்கு இந்நோயின் பெயர் சூட்டி மகிழ்வடைகின்றனர்.

கொரோனா சீனாவில் பிறந்ததா அல்லது உருவாக்கப்பட்டதா என்ற பட்டிமன்றம் வேறு. ஐரோப்பாதான் இதன் தாய்வீடு என்றும் சிலர் சொல்கின்றனர். ஆனால், அதிகூடிய மரண எண்ணிக்கையைக் கொண்ட அமெரிக்காவிலிருந்து முக்கிய தகவல் ஒன்று காலம் தாழ்த்தி வந்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பெப்ரவரி மாதம் 6ம் திகதி நல்ல ஆரோக்கியமான, திடகாத்திரமான, தினசரி உடற்பயிற்சி செய்துவந்த, எந்த நோயுமற்ற, மருந்து எதுவும் பாவிக்காத 57 வயது பெண்மணி ஒருவர் திடீரென காலமானார். சில நாட்கள் மென்காய்ச்சலால் அவர் பீடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவரைத் தொடர்ந்து பெப்ரவரி 17ம் திகதியும், மார்ச் மாதம் 6ம் திகதியும் இதே மாநிலத்தில் இருவர் மரணத்தைத் தழுவினர். இருதய நோயினால் இவர்கள் மூவரும் மரணித்ததாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்த வாரம் வெளியான உடற்கூற்றுப் பரிசோதனைகள் இவர்களின் இறப்புக்கு கொரோனா நோயே காரணமென உறுதி செய்துள்ளதாக லொஸ் ஏஞ்ஜல்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

கொரோனா என்றால் என்னவென்று உலகம் தெரிந்திராத வேளையில், தங்கள் நகரத்துக்கு வெளியே எங்கும் சென்றிராதவர்கள் என்று கூறப்படும் இம்மூவரதும் மரணம் எடுத்துக்கூறும் செய்தி என்ன?

கொரோனாவின் பிறப்பிடம் சீனா என்றும், திட்டமிட்டு சீனா இதனைப் பரப்பியது என்றும், இதனை விசாரணை செய்ய அமெரிக்க நிபுணர்கள் குழுவை சீனாவுக்குள் அனுமதிக்க வேண்டுமென்றும் (சீனா அனுமதியை மறுத்துவிட்டது), இது உண்மையென நிரூபிக்கப்பட்டால் சீனா தண்டனையை அனுபவிக்குமென்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சீனாவை நோக்கி விரல் சுட்டி நிற்பது இந்நோயின் தாக்கத்திலிருந்து உலகை மீட்கவா அல்லது அரசியல் ரீதியாக லாபம் ஈட்டவா என்ற கேள்வியை முன்வைக்கிறது.

இதுவரை வெளியான தகவல்களின்படி அமெரிக்காவிலேயே அதிகளவு நோய்த் தொற்று மட்டுமன்றி மரணங்களும் இடம்பெற்றுள்ளன. இங்கு மரண எண்ணிக்கை ஒரு லட்சம்வரை செல்லக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சீனாவில் முதற்சுற்று முடிவடைந்து இரண்டாம் சுற்று ஆரம்பமாகியுள்ளது. ரஷ்ய நாட்டு எல்லைப்புறத்தில் இது ஆரம்பித்துள்ளதால் அந்நாட்டை இது பெருமளவில் பாதித்துள்ளது.

மரண எண்ணிக்கையின் விகிதாசாரத்தில் கனடா பத்தாம் இடத்துக்குப் பின்னால் நிற்கின்றதாயினும் தினசரி இழப்பு அதிகமாகி வருகிறது. கியுபெக் மற்றும் ஒன்ராறியோ மாகாணங்களே அதிகளவு மரணங்களை சந்தித்து வருகின்றன.

இங்குள்ள முதியோர் பராமரிப்பு இல்ல மரணங்கள் கட்டுடைத்துள்ளமையால் ராணுவத்தினர் இங்கு அத்தியாவசியப் பணிக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கனடிய பொருளாதாரம் தேக்க நிலையை நோக்கிச் செல்கின்ற போதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் நியாயமான அளவில் வழங்கப்பட்டு வருகிறது.

இதனை சன்மானமாக அல்லது சலுகையாகப் பார்ப்பதா, அல்லது வட்டியும் வரியுமாக மீளச் செலுத்த வேண்டிய தண்டனையாகப் பார்ப்பதா என்று தெரியாத நிலையில் கிடைப்பதை இப்போது பெறுவோம் என்ற மனப்பாங்கில் அப்பாவிப் பொதுமக்கள் அதனைப் பெற்று தங்கள் வாழ்க்கையை சுமாராக ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.





றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கொரோனா நோய் காரணமாக உலகளாவிய மட்டத்தில் பாடசாலைகள், சமூக கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 154 கோடி மாணவரின் கல்வி பாதிக்கப்பட்டிருப்பதாக யுனெஸ்கோ அமைப்பு அறிவித்துள்ளது. இத்தொகையில் 74 கோடியினர் பெண்களென்றும், இதில் 11 கோடிக்கும் மேலானவர்கள் வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாடசாலைகள் மீள ஆரம்பிக்கையில் பலர் கல்வியை நிறுத்திவிடக்கூடுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கொரோன வைரஸ் பற்றிய தகவல்களை மறைத்து உலகில் உயிர் மற்றும் பொருளாதார சேதங்களை ஏற்படுத்தியமைக்காக சீனா இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டுமெனக் கோரி அமெரிக்காவின் மிசோரி மாநிலத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மிசோரி மாநில அரச வழக்கறிஞர் சட்டமாஅதிபர் எரிக் சிமித் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கே சீனாவுக்கு எதிரான முதல் வழக்காகும். சீன அரசு, ஆளும் கம்யூனிஸ்ற் கட்சித் தலைவர்கள், சீன அதிகாரிகள் எதிர் மனுதாரர்களாக குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில், வைரஸ் மனிதர்கள் மூலம் மனிதர்களுக்கு பரவும் என்பதை சீனா மறைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளாகி மீண்டவர்களை மீண்டும் கொரோனா நோய் பீடிக்காது என்று பரவலாகப் பரப்பப்படும் வதந்தியை உலக சுகாதார நிறுவனம் மறுதலித்துள்ளது. கோவிட்-19 வைரஸ் ஏற்கனவே நோய்வாய்ப்பட்டவர்களை இரண்டாம் தடவையும் தாக்கும் வல்லமை கொண்டதென மேற்படி நிறுவனம் அறிவித்துள்ளது. ஏற்கனவே கொரோனா தாக்குதலுக்குள்ளானவர்கள் தங்களுக்கு மீண்டும் நோய் தாக்காது ‘பாஸ்போர்ட்’ கிடைத்துள்ளதாக கருதக்கூடாதென்றும் அதற்கு எந்த ஆதாரமும் கிடையாதென்றும் யுனெஸ்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாலி நாட்டில் கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் அரசாங்க உத்தரவுகளையும் கட்டுப்பாடுகளையும் அலட்சியம் செய்து தங்கள் குடியிருப்பில் விருந்துக் கொண்டாட்டம் நடத்திய இலங்கையர்கள் 11 பேரை அந்நாட்டுப் பொலிசார் சுற்றிவளைத்துக் கைது செய்தனர். இரகசிய தகவலொன்றையடுத்து இவர்களைக் கைது செய்தமை அந்நாட்டின் ஐ. பி. என். தொலைக்காட்சியில் நேரடியாகக் காண்பிக்கப்பட்டது. அகப்பட்டுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் தலா 33,000 யூரோ அபராதமும் விதிக்கப்பட்டது.

கொரோனா நோய் காரணமாக கனடிய தபால் திணைக்களம் அறுபது நாடுகளுடனான தபாற் சேவையை மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தம் செய்துள்ளது. இது இருவழிப் பாதையையும் தடை செய்யும் நடவடிக்கை. இலங்கை மற்றும் இந்தியாவும் தடை செய்யப்பட்ட நாடுகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இதனால் தபால்கள், பார்சல்கள் உட்பட கனடியத் தபால் திணைக்களத்தின் அனைத்துச் சேவைகளும் இந்த அறுபது நாடுகளுக்கும் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள் அனைத்துமே இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

கொரோனா நோய் அதிகரிப்பினாலும், இதனால் ஏற்படும் மரணங்களினாலும் அத்தியாவசிய பொருட்கள் பலவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ளது. விமான சேவைகள், கப்பல் போக்குவரத்துகள் தடைப்பட்டமை மட்டுமன்றி உள்நாட்டில் தொழிற்சாலைகள் மூடப்பட்டமையும் உற்பத்தியின்மையும் இதற்குக் காரணம். இதனால் பல நாடுகளில் சடலப் பெட்டிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், கடதாசிப் பெட்டிகளை இதற்காகப் பயன்படுத்த நேர்ந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சமூக உணர்வாளர் ஜவஹர்லால் நேரு



கனடியத் தமிழர் மத்தியில் நன்கு அறிமுக - மான சமூக உணர்வாளரும், தமிழர் தகவலின் நீண்டகால கட்டுரை எழுத்தாளருமான திரு. குமாரசாமி ஜவஹர்லால் நேரு கடந்த மாதம் 14ம் திகதி ரொறன்ரோவில் காலமானார். இதற்கு மறுநாள் 15ம் திகதி இவரது மனைவி இராஜேஸ்வரி காலமானார். 1980ம் ஆண்டு முதல் கனடாவில் வசித்து வந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழர் தகவலின் 4வது ஆண்டு மலரில் முதன்முதலாக எழுத ஆரம்பித்து தொடர்ந்து மாத இதழ்களிலும் ஆண்டு மலர்களிலும் எழுதி வந்தார். இவரது கட்டுரைகள் அனைத்தும் கனடிய தமிழரின் அரசியல் பங்களிப்பு, பொருளாதாரம், கல்வித்துறை ஆகியவைகளை முன்னிறுத்தி எழுதப்பட்டவை.

எங்களை நோக்கி வரும் சோதனையான எதிர்காலம் என்ற தலைப்பில் 1995ல் இவர் எழுதிய கட்டுரையின் இறுதிப் பகுதியில், சீனர்-களும் யூதர்களும் சீக்கியர்களும் சாதிப்பதை நாமும் சாதிக்க முடியும். இளஞ்சந்ததியை எம்மோடு என்றும் வைத்திருக்க முடியும் என்ற நம்பிக்கையோடு அத்திவாரங்களை இடவேண் - டியது எமது கடமை என்று அமைந்திருப்பது இவரது சமூகம் சார்ந்த தூரப்பார்வையை புலப்படுத்துகிறது. தொடர்ந்து தமிழர் தகவலில் எழுதி வந்தமைக்காக இரண்டு தடவை ஒன்ராறியோ அரசின் தன்னார்வ தொண்டர் சேவை விருது இவருக்கு வழங்கப்பட்டது.

ஓய்வு காலத்தை பயனுள்ளதாகப் பயன்படுத்த விரும்பிய இவர் யோர்க் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று பட்டம் பெற்றார். வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் குடும்பத்தின் பதினொரு பிள்ளைகளில் மூன்றாவதாகப் பிறந்தவர். மூத்தவர்களான இராமச்சந்திரன், கமலாதேவி மற்றும் இளைய-வர்களான இந்திராதேவி, சரோஜினிதேவி, மோதிலால் நேரு, செல்வச்சந்திரன் நெப்போலி-யன், நந்தலால் நேரு, சொரூபராணி ஆகியோர் அமரராகிவிட்டனர். இளைய சகோதரர்களான ராதாராணி வல்வெட்டித்துறையிலும், பாலச்சந்திரன் பிரித்தானியாவிலும் வாழ்ந்து வருகின்றனர். சாமினி கீதாஞ்சலி, சுபோதினி ரேணுகா ஆகிய இரு புதல்விகளின் பெற்றோர்-களான ஜவஹர்லால் நேரு - இராஜேஸ்வரி தம்பதியர் இறுதிக் காலத்தில் ஸ்காபரோவி - லுள்ள முதியோர் பராமரிப்பு இல்லத்தில் தங்கியிருந்த வேளையில் இயற்கை எய்தினர்.



கனடா மூர்த்தி

# கோவிட்-19 (கொரோனா)

**சிறப்புக் கட்டுரை**

அவள் மருத்துவத் தாதி. போர்க்களத்திற்குப் போகும் ஒரு போர்வீரனுக்குரிய மன உறுதியோடு கொரோனா நோயாளிகள் உயிருக்குப் போராடிக் - கொண்டிருக்கும் அந்த மருத்துவமனைக்குள் நுழைகிறாள். மருத்துவமனையை விட்டு வெளியே வரும்போது மறுநாளும் களம் புக அவளது உயிருக்கு உத்தரவாதம் இருக்குமா என்பது அவளுக்குத் தெரியாது.

## எதிர்வரும் காலம் முன்புபோல இருக்காது

ஐந்து ஆண்டுகள் கழிகின்றன - இப்போது 2025ம் ஆண்டு! கைத்தொலைபேசியில் பொருத்தியிருக்கும் லேசர் வெப்பமானியால் எமது உடல் வெப்பநிலையை அவ்வப்போது சோதித்துக் கொள்கிறோம். பொருட்களின் விலைகள் 2019இல் இருந்த - தைவிட இரண்டு மூன்று மடங்கிற்கு மேல் அதிகரித்துவிட்டன. வீட்டில் இருந்து கொண்டே வேலை செய்யும் கலாசாரம் உருவாகிவிட்டது. சிறுவர் பாடசாலைகள் முதல் பல்கலைக் - கழகங்கள் வரை இணையம்வழி பாடங்கள் நடத்தப்படுவது வழக்கமாகிவிட்டது. உணவகங்களில் உட்காருவதற்கான ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு தள்ளித்தள்ளிப் போடப்பட்டிருக்கின்றன. கோயில்களில் குறிப்பிட்ட எண்ணிக்கை பக்தர்களுக்கே உள்ளேவர அனுமதி என்பதால் பக்தர்கள் குழுக்குழுவாக உள்ளே வருகிறார்கள். அர்ச்சனைகள், ஆராதனைகள் இணையம்வழி ஒளிபரப்பாகிறது. மக்களிடையே கடவுள் பக்தி மிகவும் அதிகரித்துவிட்டது. விமான நிலையங் - களில் வந்து இறங்கி குடிவரவு உள்நுழைவுப் பத்திரங்களை நிரப்பும்போது, கொரோனாவுக்கும் டிக் செய்யவேண்டியிருக்கிறது.

மேலே சொல்லப்பட்டவை கற்பனைபோல இருந்தாலும், இவையெல்லாம் நடக்கமாட்டாது என்பதில்லை. எதிர்காலம் கற்பனையில்கூட மிகவும் மோசமானதாக இருக்கப்போகிறது. 'வீடடங்கு நிலையிலிருந்து இனியாவது மக்களை விடுவித்து மீண்டும் அவர்களை வேலைகளுக்கு அனுப்ப வேண்டும்' என்ற யோசனைகளின் மத்தியில் அரசாங்கங்கள் கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கிவிட்டன. காத்திருப்பு தொடர்கிறது. எதிர்காலம் முன்புபோல இருக்காது.

## காத்திருப்பு தொடர்கிறது

இந்த இதழ் பிரசுரமாகும் 2020 மே மாதம் வரை கோவிட்-19க்கான தடுப்பு மருந்துகள் எதுவும் உறுதிபட உருவாக்கப்படவில்லை. ஒருவேளை அப்படி ஏதாவதொரு தடுப்பு மருந்து இந்த மாதமே உருவாக்கப்பட்டாலுங்கூட, அது சோதனை செய்யப்பட்டு பாவனைக்கு ஏற்றது என்ற உறுதி வர மாதக்கணக்கில் நாம் காத்திருக்க வேண்டும். அமெரிக்காவின் National Institute of Allergy and Infectious Diseases நிறுவன இயக்குனர் அந்தனி பவுசி (Anthony Fauci) தெரிவித்ததன்படி-க்கும் அதற்கு 12 இலிருந்து 18 மாதங்கள்வரை ஆகிவிடுமாம் (அதாவது அடுத்த 2021ம் ஆண்டு கோடைக்காலம் தாண்டும்வரை..). அதன்பின்னரே மருந்து பெருமளவில் தயாரிக்கப்பட்டு, உலகத்தின் பல பாகங்களுக்கும் வேகமாகக் கொண்டு செல்லப்பட வேண்டும். அதுவரை கோவிட்-19 பரவுவதைக் கடவுளாலும் தடுக்க முடியாது. அதுவரை நமக்குள்ள ஒரே வழி நாமே நம்மை தீண்டத்தகாதவர்கள் என்ற நிலையில் ஒடுக்கி தனிமைப்படுத்தலுடன் வாழ்வது ஒன்றுதான்.

## தீண்டத்தகாதவர்கள்

முதல் நோயாளி வுஹானிலுள்ள மருத்துவமனைக்கு டிசம்பர் 8ந் திகதி வருகிறார். அந்த இனம்காண முடியாத நோயுடன் வந்த அனைவரும் வுஹானிலுள்ள குறிப்பிட்டதொரு ஈரச் சந்தையில் தொடர்பிலிருந்தவர்கள். திணறிய சீனா 'அடையாளம் காண முடியாத வைரஸ் தொற்று ஒன்று குடிமக்களிடம் பரவிக் கொண்டிருக்கிறது' என்பதை உலக சுகாதார நிறுவனத்திடம் டிசம்பர் 31ந் திகதி தெரிவிக்கிறது. ஜனவரி 7ந் திகதி அந்த வைரஸுக்கு 2019-என்கோவ் (2019-nCov) என்ற பெயர் தரப்படுகிறது. தனது குடிமக்களில் ஒருவர் 2019-nCov தொற்று காரணமாக மரணமடைந்துவிட்டதை ஜனவரி 11ந் திகதி முதன்முறையாக சீனா உறுதிப்படுத்துகிறது. ஜனவரி 13ந் திகதி உலக சுகாதார நிறுவனம் சீனாவிற்கு வெளியேயும் இந்த நோய் பரவி விட்டதை அறிவிக்கிறது. ஜனவரி 23ந் திகதி வுஹான் மாகாணத்தை மூடி அங்கிருக்கும் தனது குடிமக்கள் அனைவரையும் தீண்டத்தகாதவர்கள் நிலையில் வைத்து கோவிட்-19 பரவலைக் குறைக்க முனைகிறது சீனா.

இவையெல்லாம் நடந்த '2019 டிசம்பர் 08க்கும் 2020 ஜனவரி 23க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில்' சீனாவிலிருந்து வெளியேறியவர்களே அந்த 2019-nCov வைரஸை பல்வேறு நாடுகளுக்கும் முதலில் காவிச் சென்றவர்களாவர். ஆக டிசம்பர் 08க்கும் ஜனவரி 23க்கும் இடைப்பட்டிருந்த காலகட்டத்தில் உலகம் ஏனோ 2019-nCov வைரஸை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. (அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உலக சுகாதார நிறுவனத்தின்மீது பழி சுமத்துகிறார்) எது எப்படியாயினும், அரசாங்கங்கள் (நம் கனடா உட்பட) இந்த வைரஸை எதிர்கொள்ளத் தேவையானவற்றை வேகமாக செய்யாமலிருந்ததன் விளைவாகவே இன்று சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைவரையும் கொரோனா தாக்கிக்கொண்டிருக்கிறது.

## முதியவர்கள்

கொரோனா சாவுகளில் 90 விழுக்காடு அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களு-க்கே நடந்திருக்கிறது. குறிப்பாக கனடாவில் நடக்கும் கொரோனாச் சாவுகளில் பெரும்பான்மை எண்ணிக்கை முதியோர் இல்லங்களிலேயே நடந்து கலங்க வைக்கிறது. கொரோனா பரவிய முதியோர் இல்லங்கள் வெளியாருக்கு மூடப்படுகின்றன. இரத்த சொந்தங்கள்கூட உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. கண்ணாடி ஜன்னல்கள் ஊடாக உள்ளிருப்போர் வெளியே ஏக்கத்துடன் பார்ப்பதும், வெளியே நின்றுகொண்டிருக்கும் பிள்ளைகள் குமுறிக் கதறுவதுமான காட்சிகள் நெஞ்சைப் பிளக்கின்றன. தனிமைப்படுத்தப்படும் முதியோர் தமது உறவுகளைக் காண முடியாமலே இறந்து கொண்டும் இருக்கின்றனர். உடல்கள் - இறுதிச் சடங்குகள் இல்லாமல் - மூடப்பட்ட பைகளுள் போடப்பட்டு விரைவாக அப்புறப்படுத்தப்படுகின்றன. ஆம். முதிய வயதை எய்திய உடலின் இயல்பாகக் கருதப்படும் நோயெதிர்ப்புச் சக்திக் குறைவு மூத்த குடிமக்களைத்தான் விரைவாக கொரோனாச் சாவுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

## நோயெதிர்ப்புச் சக்தி

வைரஸ், பக்டீரியா போன்ற அந்நிய சக்திகளுக்கு எதிராகப் போரிடும் விதத்தில்தான் நம் உடல் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்நிய படைகளை நமது உடலுள் நுழைய விடாமல் பார்த்துக் கொள்ள பல தடுப்புகளை நம் உடல் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு நமது தோல் (Skin) அவ்வாறான ஒன்று. அந்நிய சக்திகள் நமது உடலின் உள்ளே நுழைய விடாமல் தோல் தடுத்துக் கொண்டிருக்கிறது. காயம்பட்டு தோல் கிழிந்தால் மட்டுமே 'கிழிஞ்சுதுபோ' என அந்நியப்படை உள்ளே போய்விடும். காயப்பட்ட இடத்தில் வீக்கம் (அழற்சி) உருவாவது நோய்த் தடுப்புத் தந்திரோபாயமாகும். அழற்சியானது சமிக்ஞைகளைத் தந்து, உடலுள்ளிருக்கும் தற்பாதுகாப்புப் →

போராளிகளை வரவழைத்து எதிரிகளான அந்நியப் படையைக் கொல்ல ஆரம்பிக்கும். உடலின் தற்பாதுகாப்புப் போராளிகளுக்கு இன்னொரு உதாரணமாக வயிற்று அமிலங்கள், கணைய நொதிகள், பித்தம் போன்றவையும் குறிப்பிடலாம். நமது சமிபாட்டுப் பாதையில் (Digestive Tract) நாம் எதிர்கொள்ளும் கெட்ட பக்டீரியாக்களை அவை கொல்கின்றன - அல்லது பெருகவிடாது தடுத்து விடுகின்றன. அதேபோலவேதான், நமது சுவாசக் குழல் பாதையின் (Airways) உள் அமைப்பானது நாம் சுவாசிக்கும்போது உள்ளெடுக்கும் தேவையற்ற அந்நியர்களை தும்மி இருமி வெளியேற்றிவிடுகிறது. இன்னுமொரு உதாரணம் நமக்கெல்லாம் காய்ச்சல் வருகிறதே.. அது நமது உடல் தனது வெப்பநிலையை உயர்த்தி அதன் மூலம் அந்நியப்படைகளை வறுத்தெடுக்கக் கையாளும் உபாயமாகும். இதுபோன்ற இன்னும் பல நோயெதிர்ப்புப் பொறிமுறைகளை நமது உடல் கொண்டிருக்கிறது.

### நோயெதிர்ப்பு பொறிமுறை

கோவிட்-19 நோயைத்தரும் 2019-nCov வைரஸ் உடலுள் நுழைந்துவிட்டால் அதற்கு எதிராக நமது உடல் முதலில் தனது இயல்பான நோயெதிர்ப்பு பொறிமுறைகளைக் கையாண்டு போரிட ஆரம்பிக்க முயலும். அதனால்தான் கொரோனா அறிகுறிகளாக இருமல், காய்ச்சல் வருமாயின் - முதலில் முன்னெச்சரிக்கையுடன் நம்மைத் தனிமைப்படுத்தி - உடலின் நோயெதிர்ப்பு சக்தி வலுவடையவைக்கப் பார்க்க வேண்டும். இப்போராட்டத்தில் நம் நோயெதிர்ப்பு தோல்வி கண்டு, 2019-nCov அந்நிய சக்திகள் வெற்றியடைவதாக உணரும் பட்சத்திலேயே மருத்துவமனைகள் நோயாளிகளை சேர்த்துக் கொள்ளும். அங்கும் முதலில் நோயெதிர்ப்பு வலுவை தற்காலிகமாக கொண்டுவர மருத்து, மாத்திரைகள் தரப்படுகின்றன. தற்போது பலரது கவனத்தை ஈர்த்துவரும் ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் (Hydroxychloroquine-HCQ) போன்ற சில மருந்துகள் அவ்வாறானவையே.

### ஹைட்ராக்ஸிகுளோரோகுயின்

உலகில் அதிகளவு ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றது. மாத்திரை வடிவில் கிடைக்கும் ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் மலேரியா, முடக்குவாதம் உள்ளிட்ட சில நோய்களுக்காகத் தரப்படும் வைரஸ் எதிர்ப்பு மருந்தாகும். கோவிட்-19இற்கு எதிராகவும் இதை பயன்படுத்த முடியும் என்று சில மருத்துவ நிபுணர்கள் நம்புகிறார்கள். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இந்த ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் மருந்தினை Azithromycin உடன் இணைத்து கொரோனா நோயாளர்களுக்குத் தரலாம் என்று அறிவித்த கையோடு, இந்தியாவிலிருந்து அதைப் பெற தீவிர முயற்சிகள் செய்து (மிரட்டி?) ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் மாத்திரைகளை இறக்குமதி செய்திருக்கிறார். இருந்தபோதும் ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் உலக சுகாதார நிறுவனத்தால் இன்னும் ஏற்கப்படாததொரு கொவிட்-19 தடுப்பாகும்.

சீனாவில் கோவிட்-19 உச்சத்திலிருந்தபோது வுஹான் பல்கலைக்கழகத்தின் ரென்மின் மருத்துவமனையில் கோவிட்-19 பாதித்த 62பேருக்கு (29 ஆண்கள், 33 பெண்கள்) ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் தரப்பட்டு ஆராயப்பட்டது. மருத்துவ மீட்புக்கான நேரம் (TTCR) மருத்துவ பண்புகள் (Clinical Characteristics) மற்றும் கதிரியக்க முடிவுகள் (Radiological Results) மதிப்பீடு செய்யப்பட்டன. முடிவுகளின்படி அவர்களில் பாதிப்பேருக்கு ‘உடல் வெப்பநிலை மீட்பு நேரம்’ மற்றும் ‘இருமல் நீக்கும் நேரம்’ கணிசமாகக் குறைந்திருந்தது. ஆனால் 4 பேருக்கு நிலைமை கடுமையாகிவிட்டது. 2 நோயாளிகள் மிகப்பாதகமான விளைவுகளுடன் இருந்தனர்.

மொத்தத்தில், ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் பயன்பாடு கோவிட்-19 தடுப்பு அல்ல. அது ‘மருத்துவ மீட்புக்கான நேரத்தை *(TTCR)* கணிசமாகக் குறைப்பதுடன் நிமோனியாவை எதிர்க்கிறது’ என்பதை மட்டும்தான் இன்று ஆய்வுகளால் உறுதியுடன் சொல்லமுடிகிறது.

அதனால் கோவிட்-19 தடுப்பு மருந்தொன்றை உருவாக்குவதற்கான மருத்துவ ஆய்வுகள் தொடர்ந்தும் வேகமாக நடைபெறுகின்றன.

மருத்துவ ஆய்வுகள் - ஒரு எளிய விளக்கம்.
காமுகனான 2019-nCov வைரஸ் ஒரு மன்மதன்போல தான் வைத்திருக்கும் ‘Spike’ என்றழைக்கப்படும் புரதத்தின் உதவியுடன் நம் மனிதக் கலங்களிலிருக்கும் ‘Receptor’ என்ற புரதத்துடன் கைகுலுக்கிக் கொள்கிறது. இந்த ‘Receptor’ என்ற அபலைப்பெண் அக் கைகுலுக்கலில் ஏனோ மயங்கி வந்தவனை முத்தமிட்டுக் கொள்கிறது. அதன் தொடர்ச்சியாக அவை இரண்டும் முயங்கிக் கொள்கின்றன. அபலைப் பெண்ணாகிய ‘Receptor’ காம மயக்கத்தில் ‘Spike’ உடன் கலவி செய்யும்போது மன்மதன் வேடத்திலிருக்கும் 2019-nCov நமது கலத்தினுள் புகுந்து கொள்கிறான். கலத்தினுள் புகுந்து தன்னைப்போல லட்சக்கணக்கான 2019-nCov வைரஸ்களை அசுரத்தனமாக உருவாக்குகிறான்.

மருத்துவ ஆய்வுகளில் மேலே சொன்ன கைகுலுக்கலை ‘Attachement என்று அழைக்கிறார்கள். முயங்குதலை ‘Fusion’ என்றழைக்கிறார்கள். மருத்துவ ஆய்வாளர்கள் இன்று செய்ய நினைப்பதெல்லாம் இந்த Attachement’ அல்லது ‘Fusion’ இரண்டில் ஒன்றை அல்லது இரண்டையுமே இல்லாமல் செய்யும் மந்திரத்தை கண்டு பிடித்து ஓதுவதுதான். அவ்வாறு ஓதினால் 2019-nCov வைரஸ் மனிதக் கலங்களுக்குள் புகுவது தடுத்து நிறுத்தப்படுமல்லவா! அந்த மந்திரத்தையே நாம் தடுப்பு மருந்து என்கிறோம்.

### தடுப்பு மருந்துகள்

2019-nCov வைரஸ் நம் உடலின் கலங்களுடன் செய்யும் ‘Attachement’ & ‘Fusion’ ஒரு மர்மம் கலந்த புதிர். இதை தடுக்க 70க்கும் மேற்பட்ட தடுப்பு மருந்துகள் உலகளாவிய நிலையில் தொடர்ந்தும் ஆய்வு நிலையில் இருந்து வருகின்றன. அமெரிக்காவின் பிரபல Moderna Inc நிறுவனம் ஏற்கனவே ஒரு மருந்து உருவாக்கப்பட்டு விட்டதாயும், பெருமளவிலான சோதனைகள் ஜுன் மாதத்தில் நடக்கும் என்றும் அறிவித்துவிட்டது. அமெரிக்காவின் இன்னொரு நிறுவனமான Inovio Pharmaceuticals தனது சோதனையானது தடுப்பூசிகள் தரும் நிலைக்கு சென்றுவிட்டதாக அறிவித்திருக்கிறது. சீனாவின் CanSino Biologics நிறுவனம் கோவிட்-19 தடுப்பு மருந்து உருவாக்கத்தில் முன்னிலை வகிப்பதாகவும் சொல்லப்படுகிறது. அந்நிறுவனம் தனது இரண்டாம் கட்ட சோதனைகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக சீனாவின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்திருக்கிறது.

எதிர்மறைத் தடுப்பு மருந்தியல் (Reverse Vaccinology) முறையில் தமிழகத்தில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழகம் கொரோனா வைரஸை நம் கலங்களுள் புகவிடாது தடுக்கும் இரசாயனக்கூறு ஒன்றை அடையாளம் கண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (தினமணி 22 - ஏப்ரல் - 2020) அந்த ஆய்வின்படி கடுக்காய், கற்பூரவள்ளி, சிற்றரத்தை, அழிஞ்சல், எழிலைப்பாவை, நீர்ப்பிரம்மி, திப்பிலி, கோரைக்கிழங்கு, அமிர்தக்கொடி, நொச்சி, ஆடாதொடை உள்ளிட்டவற்றில் இருக்கும் இரசாயனக்கூறுகளின் உதவியுடன் அந்த தடுப்பு மருந்து ஆய்வறியப்பட்டுள்ளது. சோதனைகள் தொடர்கின்றன.

இதற்கிடையே, உலகின் தலைசிறந்த மருத்துவ ஆய்வு நிபுணர்களும், நிறுவனங்களும் ஒன்ராறியோவில் இருக்கின்ற காரணத்தினால் ஒன்ராறியோவில் கோவிட்-19 மருத்துவ ஆய்வுகளைத் துரிதப்படுத்த ஒன்ராறியோ முதல்வர் டக்போர்ட் ஏப்ரல் 18ந் திகதி இருபது மில்லியன் டாலர்களை ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார். நம்பமுடியாத விதத்தில் கோவிட்-19 நம்மிடையே வந்ததுபோல மின்னாமல் முழங்காமல் அதற்கான தடுப்பு மருந்தும் எங்கிருந்தாவது வரட்டும் என்று பிரார்த்திப்பது ஒன்றுதான் இன்று நாம் செய்யக்கூடியது.

# உறைய வைக்கும் உண்மை



ஜப்பானின் உடலியல் மற்றும் மருத்துவ பேராசிரியர் டாக்டர் தாசுகு ஹொன்ஜோ, கொரோனா வைரஸ் இயற்கையானது அல்ல என்று கூறி ஊடகங்கள் முன் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். இது இயற்கையானது என்றால், முழு உலகையும் மோசமாக பாதிக்காது. ஏனெனில் இயற்கையின் படி, வெவ்வேறு நாடுகளில் வெப்பநிலை வேறுபட்டது. இது இயற்கையானது என்றால், அது சீனாவைப் போன்ற வெப்பநிலையை கொண்ட நாடுகளை மட்டுமே பாதிக்கும்.மற்ற நாடுகளை பாதிக்காது.. ஆனால் அதற்கு பதிலாக, இது சுவிட்சர்லாந்து போன்ற நாட்டிலும் பரவுகிறது, அதே நேரத்தில் அது பாலைவன பகுதிகளிலும் பரவுகிறது. விலங்குகள் மற்றும் வைரஸ்கள் குறித்து 40 வருட ஆராய்ச்சி செய்துள்ளேன். இது இயற்கையானது அல்ல. இது தயாரிக்கப்பட்ட வைரஸ் முற்றிலும் செயற்கையானது. நான் சீனாவின் வுஹான் ஆய்வகத்தில் 4 ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன். அந்த ஆய்வகத்தின் அனைத்து ஊழியர்களையும் நான் முழுமையாக அறிவேன். கொரோனா விபத்துக்குப் பிறகு அவர்கள் அனைவருக்கும் நான் போன் செய்து வருகிறேன். ஆனால், அவர்களின் தொலைபேசிகள் அனைத்தும் கடந்த 3 மாதங்களாக இறந்துவிட்டன. இந்த ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள் என்பதை இப்போது அறிந்து கொண்டேன்.

இன்றுவரை எனது அனைத்து அறிவு மற்றும் ஆராய்ச்சிகளின் அடிப்படையில், கொரோனா இயற்கையானது அல்ல என்பதை 100% நம்பிக்கையுடன் சொல்ல முடியும். இது வௌவால்களிலிருந்து வரவில்லை. சீனா இதை தயாரித்துள்ளது. இன்று நான் சொல்வது பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் எனது மரணத்திற்குப் பிறகும் அரசாங்கம் எனது நோபல் பரிசைப் மீளப்பெறலாம். ஆனால் சீனா பொய் சொல்கிறது, இந்த உண்மை ஒரு நாள். அனைவருக்கும் வெளிப்படுத்தப்படும். ஒவ்வொரு முறையும் நாம் விசித்திரமான முன்னோக்குகளைப் பெறுகிறோம், ஆனால் அதன் நம்பகத் தன்மைக்கு உறுதியளிக்க முடியாது, ஆனால் சில தகவல்கள் அர்த்தமுள்ளதாக இருக்கும்.



அ. முத்துலிங்கம்

# வாசகரும் வாசித்தவரும்

இலக்கியம் என்பது காலத்தின் சாட்சியம். இலக்கியவாதிகள் தாம் வாழும் காலத்தின் எல்லா நிகழ்வுகளையும் படைப்புகளாக மாற்றிவிடும் ரசவாதம் தெரிந்தவர்கள். உலகம் முழுவதையும் தனிமையிலும் சோர்விலும் தள்ளும் இந்தக் கொரோனா காலத்தை, புலம் பெயர்ந்து வாழும் நம் தமிழ் எழுத்தாளர்கள் எப்படிக் கழிக்கிறார்கள்?

சில நாட்களுக்கு முன் என்னைத் திட்டி ஒரு வாசகியிடமிருந்து மின்னஞ்சல் வந்தது. திட்டு ஒன்றும் எனக்குப் புதிதல்ல. ரொறன்ரோவில் ஒரு கூட்டத்தில் என்னிடம் பேசவந்தாராம். அவரை உதாசீனம் செய்துவிட்டு வேறு ஒருவருடன் நான் பேசினேனாம். அதுதான் குற்றச்சாட்டு. வாசகரைப் பகைப்பதுபோல ஒரு மூடத்தனம் வேறு என்ன இருக்கிறது? மன்னிப்புக் கடிதம் எழுதினேன். அந்த வாசகி என்னை விட்டு விலகினால் என் வாசகர் திரள் 25 வீதம் குறைந்துவிடும் என்பது எனக்கு மட்டுமே தெரியும்.



கொரோனா சமயத்தில் என்ன படிக்கிறீர்கள், என்ன எழுதுகிறீர்கள் என்று கடிதங்கள் வருகின்றன. வீட்டுச் சிறையில் இருப்பதால் நிறைய எழுதலாம் என்று நினைக்கிறார்கள். அடுத்த நேர உணவுக்கு ஒரு திட்டம் வைத்திருக்க வேண்டும். கைகள் கழுவுவதற்குக் கிருமி நாசினி வேண்டும். கையுறையும் முகக்கவசமும் அவசியம் என பயமுறுத்துகிறார்கள். கடை கடையாக ஏறி இறங்கினேன். முகக்கவசம் கிடையாது. கையுறை கிடையாது. உணவு வாங்குவதற்கு தூரம் செல்லவேண்டும். வரிசையில் ஆறடி விலகி நிற்பது அவசியம். காசைத் தொடமாட்டார்கள்.

கடன் அட்டையில் பணத்தைச் செலுத்தவேண்டும். வாசல் கதவைத் திறந்து பார்த்தபோது உணவு இருந்தது. என்னைத் திட்டிக் கடிதம் எழுதிய வாசகி தமிழரசி உணவை வைத்துவிட்டுப் போயிருந்தார். இந்த உணவுக்கு நான் இன்னும் நாலு திட்டு வாங்கச் சம்மதித்திருப்பேனே.

ஒரு செய்தி வந்தது. அஜய் தவயோகராசா என்பவரிடம் முகக்கவசம் இருக்கிறது. அவரை எனக்குத் தெரியாது. என்னை அவருக்குத் தெரியாது. எனினும் கடிதம் எழுதினேன். உடனேயே முகக்கவசங்கள் அனுப்பியிருந்தார். பணம் வாங்க மறுத்துவிட்டார். இவர்களால்தான் உலகம் இயங்குகிறது. 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்னும் புறநானூற்றுப் பாடல் நினைவுக்கு வந்தது. கோவிட் 19 கடந்துபோகும். ஆனால், சமயமறிந்து உதவிய இந்த இருவரும் என் நினைவில் கடந்து போகமாட்டார்கள்.

(ஆனந்த விகடன் ஏப்ரல் 8ம் திகதி இதழில் வெளியானது)



'கலாநிதி' பால. சிவகடாட்சம்

படித்ததும் கேட்டதும் 27

## எரித்தாலும் சரி புதைத்தாலும் சரி

இறந்த ஒருவரின் உடலை இடுகாட்டுக்கு அல்லது சுடுகாட்டுக்கு எடுத்துச்செல்ல முற்படும்போதே அவ்வுடலுக்கு இனிமேல் ஒரு பெறுமதியும் இல்லை என்பது அர்த்தமாகின்றது. அவ்வாறு இருக்கையில் அந்த உடலை எரித்தால் என்ன? புதைத்தால் என்ன? இந்தக் கேள்வியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே எழுப்பியுள்ளார் ஒரு சங்கத்தமிழ்ப்புலவர்.

பாண்டிநாட்டில் ஒரு சிற்றூரை ஆண்டுவந்த நம்பிநெடுஞ்செழியன் சற்று வயது முதிர்ந்த நிலையில் வீட்டில் இறந்து விடுகின்றான். தமது தலைவனது உடலை எவ்வாறு அடக்கம் செய்வது என்று ஊரவர்கள் கூடி ஆலோசிக்கின்றார்கள். அப்பொழுது அங்கு வருகின்றார் 'பேரெயில் முறுவலார்' என்னும் சங்கத்தமிழ்ப் - புலவர். பேரெயில் முறுவலார் நம்பிநெடுஞ்செழியனை ஒரு போர்வீரனாக மட்டுமல்லாது, ஒரு பாசமிக்க கணவனாகவும் ஒரு சான்றோனாகவும் நன்கு அறிந்தவர். அவர் கூறுகின்றார்.

"ஒரு மங்கைக்கு மாலையிட்டு மணம் முடித்தவன். தோட்டத்தில் அவளுக்குப் பூச்சூடி மகிழ்ந்தவன். நறுமணம் மிக்க சந்தனத்தைத் தனக்குப் பூசிக்கொண்டவன். எதிரிகளை ஒழித்தவன். நண்பர்களை உபசரித்தவன். வலியவர்கள் என்பதற்காக எவரையும் வழிமொழிந்ததில்லை. எளியவர் என்பதற்காக எவரையும் இகழ்ந்தது - மில்லை. உதவிகேட்டு எவரிடமும் அவன் சென்றதில்லை. உதவிகேட்டு வந்தவருக்கு இல்லையென்று சொன்னதுமில்லை.

அரச சபையிலே தனது பெரும்புகழை நிலைநாட்டியவன். படையெடுத்து வந்தவர்களை எதிர்கொண்டவன். எதிரிகளைப் புறங்கண்டவன். அதிவேகமுடைய குதிரைகளைச் செலுத்தியவன். நீண்ட வீதிகளில் நெடுந்தேரை விடுத்தவன். யானைமேற் பயணித்தவன். குடம் நிறைந்த மதுவை அருந்தியவன். பாடிவந்த பாணர்களின் பசியைப் போக்கியவன். போலி உபசார வார்த்தைகளைப் புறக்கணித்தவன். இவ்வுலகில் செய்யவேண்டியதெல்லாம் செய்து முடித்தவன். இனிமேல் இவனது தலையை நீங்கள் புதைத்தால் என்ன? எரித்தால் என்ன? உங்களுக்குத் தோற்றியவாறு செய்யுங்கள்"

தொடி யுடைய தோள் மணந்தனன்
கடி காவிற் பூச் சூடினன்
தண் கமழுஞ் சாந்து நீவினன்
செற் றோரை வழி தபுத்தனன்
நட் டோரை உயர்பு கூறினன்
வலியரென வழி மொழியலன்
மெலியரென மீக் கூறலன்
பிறரைத் தான் இரப் பறியலன்
இரந் தோர்க்கு மறுப் பறியலன்
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்
வருபடை எதிர் தாங்கினன்
பெயர் படை புறங் கண்டனன்
கடும் பரிய மாக் கடவினன்
நெடுந் தெருவில் தேர் வழங்கினன்
ஓங்கு இயற் களிறு ஊர்ந்தனன்
தீஞ் செறி தசும்பு தொலைச்சினன்
பாண் உவப்பப் பசி தீர்த்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன் ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின்
இடுக ஒன்றோ ! சுடுக ஒன்றோ
படுவழிப் படுக, இப் புகழ்வெய்யோன் தலையே!
- புறநானூறு 239



ஈமத்தாழி - **Burial Urn**



தகனம் - **Funeral Pyre**

வாழும்போது தான் செய்யவேண்டிய கருமங்களையெல்லாம் குறைவின்றிச் செய்துமுடித்து, தன்மானமிக்க தலைவனாக மட்டுமன்றி மனிதாபிமானம் மிக்க சான்றோ - னாகவும் வாழ்ந்துகாட்டி, என்றுமே அழியாத புகழுடம்பு பெற்றுவிட்ட ஒரு மனிதனுக்கு மண்ணோடு மண்ணாகக் காற்றோடு காற்றாகக் கலந்துவிடப்போகும் உயிரற்ற அவனது உடலை அடக்கம் செய்யும் முறை எந்த - வகையில் பெருமையையோ சிறுமையையோ ஏற்படுத்தக்கூடியது என்பதே இப்புலவரின் கேள்வி. எக்காலத்துக்கும் உரிய அறிவுபூர்வமான கேள்வி.

## Burn him or Bury him

When the body of a deceased person is being carried to the burning or burial ground it is already acknowledged that the corpse has no value anymore. Is there any point of debating about whether to burn or bury the body? This question has been raised by a Tamil poet two thousand years ago.

Nambi Neduncheliyan> the chief of a village in the Pandya country passed away peacefully at home. His villagers were discussing the last rites of their beloved leader including whether to burn or bury his body. At that time a respected poet arrives at the scene. The poet knew the chief not only as a courageous soldier> but also as a loving husband and an exemplary gentleman. This is what he had to say about the dilemma facing those gathered at the scene:

He wedded a girl wearing bangles
adorned her with flowers in the garden
anointed himself with fragrant sandal paste
defeated his enemies and hailed his friends
neither seconded the powerful
nor discredited the feeble
neither asked for help from anyone
nor failed to help those in need
excelled in the king's court
faced the enemies who came
chased the invaders out
rode the fastest horses
travelled on highways in chariot
drove around on tall elephants
enjoyed drinking sweet wine
relieved the hunger of bards and made them happy
avoided confusing talks
had done everything he had to do, whether you
bury him or burn him, it is up to you
Pereyil Muruvalar : - Purananuru 239



கனகேஸ்வரி நடராஜா

# வணக்கம் கொரோனா Covid - 19

றொறன்ரோ
கனடா
10.4.2020

மாட்சிமை பொருந்திய கொரோனா
அவர்கள் அறிவது,

இற்றைக்காலம்வரை மகாராணி எலிசபெத் அம்மையார், பரிசுத்த பாப்பரசர் மற்றும் பெரும் தலைவர்களை குறிக்கும்போதே ‘மாட்சிமை’ என்ற அடைமொழியை பாவித்தோம். ஆனால் இன்றோ இத்தகைய பெரும் தலைவர்கள் தொடக்கம் பாமர மக்கள்வரை உலகில் வாழும் அத்தனை மக்களையும் கைகூப்பி மன்றாட வைத்திருக்கும் உன்னை ‘மாட்சிமை பொருந்திய’ என்று விளிப்பதே பொருத்தமாகவிருக்கும்.

கனடாவிலிருந்து விண்வெளிக்குச் சென்ற முதலாவது பெண்மணியான றொபேட்டா பொன்டார் தமது விண்வெளிப் பயணம் பற்றி ஒரு முக்கிய விடயத்தைத் தெரிவித்திருந்தார். விண்வெளியில் பயணம் செய்யும்போது நாடுகளுக்கிடையில் எல்லைகள் இல்லாத ஓர் உருண்டையாக உலகம் காட்சி கொடுத்ததாகவும், மனிதனால் வரையப்பட்ட எல்லைக்கோடுகள்தானே மனித குலத்தை பிரித்து வைத்து பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அப்படியான எல்லைகளற்ற ஓர் உலகத்தை உனக்கு நீ உருவாக்கியுள்ளாய். உனக்கு எல்லைக்கோடுகள் கிடையாது, எல்லைச் சுவர்களும் கிடையாது. சர்வதேச நாடுகள் பிரயாணத் தடைகளை அமுல்படுத்தியதன் மூலம் தங்கள் எல்லைக்கோடுகளை ஆழமாகக் கீறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் எல்லோரையும் நீ பார்த்து எள்ளி நகையாடுவதை உணரக்கூடியதாக இருக்கிறது.

‘உனது தாயகத்தில் பதுங்கு குழிகளுக்குள் பாம்பு, பூரான் முதலிய ஜந்துகளுக்குள் எத்தனை கஷ்டப்பட்டாய். வான் தாக்குதல், தரை தாக்குதல், ஊரடங்குச் சட்டங்கள், இராணுவக் கைதுகள் எல்லாவற்றுக்கும் முப்பது வருடங்களுக்கு மேலாக ஈடு கொடுத்த நீ என்னைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்” என்று நீ கூறுவது என் காதில் விழுகிறது.

ஆம், நீ சொல்வது முற்றிலும் உண்மை. மனிதன் என்பவன் ஒரு சமூகப் பிராணி. அவனால் தனித்து வாழ முடியாது. பதுங்கு குழிகளுக்குள்கூட நாங்கள் பலரோடு சேர்ந்துதான் இருந்தோம். எத்தனை தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்தாய் என்று கேட்கிறாய். உண்மைதான், ஆனால் அங்கு கண்ணுக்குத் தெரிந்த ஒரு எதிரியோடுதான் போராடினோம். நீயோ எங்கிருக்கிறாய் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. நீ தூணிலும் இருக்கிறாய் துரும்பிலும் இருக்கிறாய். எங்கள் தாயகத்தில் ஒரு சில மணித்தியாலங்கள் ஒரு வெளிப்பு வரும். உனக்கு ஓய்வே இல்லை. அங்கு தாக்குதல் நடத்தாத பல இடங்கள் இருந்தன. ஆனால் நீயோ உலகம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறாய்.

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை ‘கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது’ என்று கூறினார். அந்த யுத்தம் இதுதானா என எண்ணத் தோன்றுகிறது.

உலகின் பணக்காரர்களின் பட்டியலில் முதலாவது இடத்திலிருக்கும் பில்கேட்ஸ் என்ற தர்மவானை நீ அறிந்திருப்பாய். உனது வருகையால் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார். அவர் கூறுவதன்படி எல்லோரும் சமம் என்பதைக் கூறிவிட்டாய். உலகத்தின் சுகத்தில்தான் தனிமனிதனின் சுகம் தங்கியிருப்பதை உணர்த்திவிட்டாய். தேவையில்லாத ஆடம்பரங்களுக்கெல்லாம் மனிதர் அடிமையாகிவிட்டதை உணரச் செய்து விட்டாய். நான் அவற்றை ஏற்றுக் கொள்கிறேன்.

இருநூறு வருடங்களுக்கு மேலாக பிரித்தானியர்களின் ஆட்சியின் கீழ் இந்தியா இருந்தது. கைகூப்பி வணக்கம் சொல்லும் பழக்கத்தை அப்போது அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை. ஒரு நாளிலேயே நீ அதனைச் சாதித்துவிட்டாய். இளவரசர் சார்ள்ஸ் இரு கரம் கூப்பி வணங்கும்போது உன்னை மெச்சாமல் இருக்க முடியவில்லை.

சாயி பஜனைகளின் முடிவில், ‘சமஸ்த லோகா சுகனோ பவந்து” என்று பாடுவோம். சகல உலகங்களும் சுகமாக இருக்க வேண்டுமென்பது இதன் அர்த்தம். இதன் கருத்தை இப்பொழுதுதான் நான் உணர்கிறேன். பிரபஞ்சம் முழுவதும் சுகமாக இருந்தால்தான் நாம் சுகமாக இருக்க முடியுமென்பது நன்கு புலனாகிறது.

தூய்மையை மதமாகக் கொண்டதே இந்து மதம். அது கூறும் சுகாதாரப் பழக்கவழக்கங்களை நாகரிகம் என்ற போர்வையில் நாம் கடைப்பிடிக்கத் தவறி விட்டோம். அவற்றையெல்லாம் பின்பற்ற வைத்துவிட்டாய். துன்பமும் மகிழ்ச்சியும் மாறி மாறி வரும் என்று செவி வழியாக வந்த ஒரு பழமையான சுபிக் கதையுண்டு. அதில் கூறப்பட்டதுபோல ‘இதுவும் கடந்து போகும்’ என்பதுபோல் நீயும் கடந்து போவாய் என்பது விளங்குகிறது. ஆனால், அது எப்போது என்பதுதான் தெரியவில்லையே. இத்தகைய நிச்சயமற்ற மனநிலையில் வாழ முடியாது.

வளிமண்டலத்தை மாசுபடுத்தி மனிதர் மூச்சு வாங்க முடியாமல் திணறடிக்க வைத்தோம். ஏற்றுக் கொள்கிறேன். அதற்குப் பழிவாங்கவா மக்களை மூச்சுத் திணற வைக்கிறாய்.

கண்ணகிகூட மதுரையை எரிக்கும்பொழுது “சான்றோர், குழந்தைகள், ஆவினம் தவிர்த்து வஞ்சகரைக் கொல்” என்று அக்கினி பகவானிடம் வேண்டினாள். ஏன் உன்னால் அவ்வாறு நடந்து கொள்ள முடியவில்லை.

மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும். இப்படியே அவர்கள் எல்லோரும் அடைபட்டுக் கிடந்தால் மனநோயாளர்களாக மாறிவிடுவார்கள். முழந்தாளிட்டு இரு கரம் கூப்பி உன்னை வணங்கி வேண்டுகிறேன் - ‘போய்விடு, பிளீஸ் (Please)’

இப்படிக்கு
மக்கள் நலன்விரும்பி



இரா. சம்பந்தன்

# சங்க இலக்கியமும் ஒரு மருத்துவ சிந்தனையும்!

வழுக்குகின்ற நிலத்திலே நடப்பவர்களுக்கு அவர்கள் கையிலே பிடித்திருக்கும் ஊன்றுகோல் வீழ்ந்து விடாமல் இருக்க அவர்களுக்கு எப்படி உதவுமோ அதுபோல வாழ்க்கைப் பயணத்திலும் நாம் வீழந்து விடாமல் இருக்க எமக்கு உதவி செய்வது ஒழுக்கம் உடையவர்கள் வாயிலே இருந்து வரும் நல்ல அறிவுரைகள் ஆகும் என்றார் திருவள்ளுவர்.

இழுக்கல் உடையுழி ஊன்றுகோல் அற்றே
ஒழுக்கம் உடையவர் வாய்ச் சொல்

என்பது அவர் எழுதி வைத்த குறள். மனித சமுதாயத்திலே அறிவாளிகள் இருக்கிறார்கள். துறவிகள் இருக்கின்றார்கள். சோதிட வல்லுனர்கள் இருக்கின்றார்கள். கல்விமான்களும் இருக்கின்றார்கள். இவர்கள் யாராக இருந்தாலும் ஒழுக்கம் இல்லாதவர்களாக இருந்தால் அவர்களின் கதையைக் கேளாதீர்கள் என்பது வள்ளுவர் கருத்து.

தான் சொல்ல வந்த கருத்தை வலியுறுத்த ஒழுக்கம் உடையவர் என்ற சொற்பிரயோகத்தைக் கையாண்டார் வள்ளுவர். வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் என்ற பாடலை ஔவை தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு என்று முடித்தாள். அவளின் பாடலிலே தப்பாமல் என்ற சொற்பதத்திற்கு கனம் அதிகம். பிள்ளையார் பாதத்தை தவறாமல் கும்பிடுபவர்க்கே ஒழிய பிறருக்கு வாக்கு உண்டாகாது நல்ல மனம் உண்டாகாது என்பது அவள் கருத்து.

தமிழ்ச் செய்யுள் அமைப்பிலே புலவர்கள் பயன்படுத்தும் அத்தனை சொற்களும் செறிந்த பொருள் கொண்டவை. அருவி போல ஓரிடத்தில் ஊற்றெடுத்து ஆற்று வெள்ளம் போல பரந்து பொருள் தரக் கூடியவை. ஒரு எழுத்தை நாம் தவற விட்டாலும் பாடலின் பொருளை முழுமையாக நாம் அறிந்து கொள்ள முடியாமல் தடுக்க வல்லவை.

இவற்றையெல்லாம் மனத்தில் நிலை நிறுத்திக் கொண்டு இன்றைய தொற்றுநோய் யுகத்தில் ஒரு புறநானூற்றுப் பாடலை நாம் எடுத்து நோக்குவோம். சங்க இலக்கியமான புறநானூற்றிலே நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்ற கருத்தை எல்லாம் புறக்கணித்து விட்டு மோசி கீரன் என்ற புலவன் இந்தப் பாடலைப் பாடியிருக்கின்றான்.

நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.

இந்தப் பாடலுக்கு நெல் அரிசியோ தண்ணீரோ உயிர்களைக் காப்பாற்றிவிட முடியாது. வேல் ஆயதங்களை மிகுதியாகக் கொண்ட படையை உடைய மன்னன் தானே மக்கள் உயிர் என்று அறிந்து செய்யும் பணிகளே மக்களை உலகத்தில் உயிருடன் வாழச் செய்யும் என்று இலகுவாகப் பொருள் சொல்லி விடலாம். ஆனால் புலவன் சொல்ல வந்தது அதுவல்ல.

இந்தப் பாடலிலே வேந்தன் என்பவனுக்கு புலவன் ஒரு அடைமொழி கொடுக்கின்றான். வேல்மிகு தானை வேந்தன் என்பதே அதுவாகும். இந்த அடை மொழியே இன்று உலகம் நோயால் நிலை குலைந்து கிடக்கும் நேரத்தில் இந்தப் பாடலை எடுத்துப் பேச வைக்கின்றது.

இங்கே வேந்தன் என்பவனுக்கு நல்ல மந்திரிகளை உடைய வேந்தன் என்றோ மிகுந்த செல்வத்தை உடைய வேந்தன் என்றோ அடைமொழி கொடுக்காமல் வேல் என்ற ஆயுதத்தை மிகுதியாக வைத்திருக்கும் படையினரைக் கொண்ட வேந்தன் என்று குறிப்பிட்டுச் சொல்கின்றான் அந்தப் புலவன்.

நெல்லை விளைவித்து அதனால் வரும் உணவைக் கொண்டு நாட்டு மக்களின் உயிரைக் காப்பாற்றிவிட முடியாது. ஆறு குளங்களை அமைத்து நீர்த் தேவையை பூர்த்தி செய்தும் உயிர்களைக் காப்பாற்றிவிட முடியாது. மக்களுக்கு உயிர் நாம் தான் என்ற அறிவோடு அந்தந்த அரசுகள் சில பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அரசுகளே உங்களிடம் தானே பெருந்தொகையான ஆயுதப்படை வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்களைக் கையிலே வைத்திருக்கும் ஆயுதங்களைத் தூர வைக்கச் செய்துவிட்டு மக்கள் பணி செய்ய தெருவிலே இறங்கும்படி ஆணையிடுங்கள் என்ற தன் ஆதங்கத்தை வெளிப்படுத்த வேல்மிகு தானை வேந்தர்கள் என்று மறைமுகமாக ஞாபகப்படுத்தினான் அந்தப் புலவன்.

இனி அந்தப் படை வீரர்கள் மக்களுக்கு என்ன பணி ஆற்ற வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. மனிதர்கள் உயிர் வாழ தண்ணீர் உணவு மருந்து இந்த மூன்றும் முக்கியமானவை. ஆனால் தண்ணீரையும் உணவையும் பாடலின் ஆரம்பத்திலேயே புலவன் உயிர்வாழ இப்போது தேவையற்றவை என்று நிராகரித்து விடுகின்றான். மீதியாக உள்ளதோ மருந்து. எனவே இராணுவத்தை போரில் மட்டுமே ஈடுபடுத்தாமல் மக்களுக்கு மருத்துவ உதவி செய்யும் நிலைக்கு பயிற்றுவிக்க வேண்டும் என்பதே அவன் எண்ணம் ஆகின்றது.

இன்று உலகம் முழுவதும் இராணுவம் தொற்று நோய் தடுப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றது. நோயின் கொடுமையால் பகை நாடுகளே ஒன்றிடம் ஒன்று மண்டியிட்டு உதவி தேடுகின்றன. மருத்துவர்கள் தாதிகள் மருந்துகள் பற்றாக் குறையென்று வருந்துகின்றன.

சங்கப் புலவன் சொன்னது போல ஆயுதப் பயிற்சி கொடுத்து வீணடித்த காலத்தை மருத்துவப் பயிற்சி கொடுத்துப் பயனுள்ளதாக மாற்றி வைத்திருப்போமாக இருந்திருந்தால் தொற்று நோய்க்கு எதிரிகளும் போர் முனைகளும் அதிகமாகி இருக்கும். சீன மண்ணை விட்டு நோய்க் கிருமிகள் வெளியேறா வண்ணம் மருத்துவப் படைகளால் அவை முற்றுகை இடப்பட்டிருக்கும். நீண்ட காலம் எடுக்காமல் குறுகிய காலத்திலேயே நோய் முறியடிக்கப்பட்டிருக்கும். இழப்புகளும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

என்ன செய்வது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இராணுவ மருத்துவம் பற்றிச் சிந்தித்துப் பாட்டு எழுதியவன் தமிழன் ஆயிற்றே. நூலும் புறநானூறு என்று தமிழ் இலக்கியம் ஆயிற்றே. அதனால் எடுபடவில்லை நாம் புலம்புவதை விட இந்தப் பாடலுக்கு இப்படிப் புலவன் மன ஓட்டத்தோடு ஒன்றுபட்டுப் பொருள் காணாமல் மக்களை உயிரென்று மன்னன் நினைக்க வேண்டும் என்று குறுகிய வட்டத்துக்குள் நின்று பொருள் சொல்லி வேல்மிகு தானை என்ற சொற்றொடரைப் பெரிதாக எண்ணாமல் தவறவிட்டுத் திருப்தி அடைந்த எங்கள் தமிழ் அறிஞர்களை நினைத்துத் தான் தலையில் அடித்துக் கொள்ள வேண்டும்.



பொன்னையா விவேகானந்தன்

# மரபும் பண்பும்

03

## நாகரிகம்

மாந்தரின் மேம்பாடு நோக்கிச் செல்லும் அறிவும் வாழ்வின் இயங்குதளங்கள் தோறும் பெறும் பட்டறிவுகளுமே பண்பாட்டு நடத்தைகளாக வெளிப்படுகின்றன. அகச்சார்புடைய அறிவையும் அனுபவத்தையும் கொண்டு பேணப்படும் பண்பாடு, கட்புலனாகவல்ல கருப்பொருளாகவும் வெளிப்படுகின்றன.

மாந்தரின் அன்றாட செயற்பாடுகளுடன் இணைந்த உணவு உடை உறையுள் என்பவற்றோடு. கலை வடிவங்களான சிற்பம் ஓவியம் ஆடல் பாடல் போன்ற உணர்வு வெளிப்பாடு வாயிலாகவும் பண்பாடு கருப்பொருளாகவும் புலனாகின்றது. இது புறச்சார்புடைய செயற்பாடாகும். இது பண்பாடு என்கின்ற நடத்தைகளின் உள்ளார்ந்த உணர்வுகளைத் தளமாகக் கொண்டு வெளியே தோன்றுகின்ற தன்மையைக் கொண்டது. இது மாந்தரின் புறவளர்ச்சியைச் சுட்டி நிற்கின்றது.

பண்பாட்டுத் தளம் தழுவிய இந்த அகச்சார்பும் புறச்சார்பும் இணைந்ததே ஒரு சமூகத்தின் முழு வளர்ச்சியாகும்.

மாந்தர் வாழும் வேறுபட்ட சமூகத்தளங்கள் யாவும் இந்த புறவளர்ச்சிகளால் மாறுபடுகின்றன. சில வாழ்வியல் தளங்கள் பெரும் பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுள்ளன. வேறு சில ஆன்மிக வளர்ச்சியைக் கொண்டுள்ளன. இந்த மாறுபாடுகளுக்குக் காரணம் அந்ததந்த வாழ்வியல் தளங்கள் கொண்டிருக்கும் அகவளர்ச்சியும் முதிர்ச்சியுமாகும்.

மானுட உள்ளத்தைக் கனமாகக் கொண்ட அக வளர்ச்சியை பண்பாடு என்றும் புறவளர்ச்சியை நாகரிகம் என்றும் கருதுகின்றனர்.

நாகரிகம் என்னும் சொல்லைப் பலர் பண்பாடு எனும் பொருளிலேயே கையாண்டு வருகின்றனர். நாகரிகம் என்ற சொல்லின் பயன்பாடு திருக்குறளிலும் நற்றிணை என்ற சங்க இலக்கியத்திலுமே காணப்படுகின்றது. இவ்விலக்கியங்களில இச்சொல் நகர அதாவது மேம்பட்ட வாழ்க்கையைக் குறிப்பிட்டது.

ஆங்கிலச் சொல்லான Civilization என்ற சொல் நகர்ப்புறத்தின் திருந்திய வாழ்க்கையைக் குறிக்கின்றது. இது இலத்தின் மொழிச் சொல்லான Civitas என்பதை அடிப்படையாக் கொண்டது. இது City அல்லது City state என்று ஆங்கிலத்தில் பொருள்படுகின்றது. Civilis என்ற இலத்தின் சொல் ஆங்கிலத்தில் Civilize எனப்பட்டது.

நகர் என்ற சொல்லின் பொருள்பட இலத்தின் மொழி Civitis என்ற சொல்லைப் பயன்படுத்திய காலத்திலேயே தமிழ் நகர் சொல்லை அதே பொருளில் பயன்படுத்தியிருக்கின்றது.

‘பாழியன்ன கடியுடை வியன்நகர்’ என்று அகநானூறும் ‘முட்கட் செல்வன் நகர்’ என புறநானூறு என்ற இலக்கியமும் குறிப்பிட்டிருக்கின்றது.

பெரு நகரங்கள் பல்வகைத் தொழில்களும் பெருகி வளர்வதற்குக் களமாகின. கலைகள் தோன்ற இடம் அளித்தன. பெரும் இல்லங்கள் அங்கு கட்டப்பட்டன. பல்வகை வண்ணங்களாலும் விளக்குகளாலும் அழகுபடுத்தப்பட்டன. இவையே நகர் எனப்பட்டன.

மக்கள் வாழிடத்தின் வளர்ச்சியையும் பெரு இல்லங்களையும் குறித்த நகர் என்ற சொல் வளர்ச்சியில் மேம்பட்ட பேரூர்களை நகரம் என்று அழைத்தனர். நகர் + அகம் = நகரம் என்பதே பின்னர் நகரியம் நாகரிகம் ஆகியது.

சங்க இலக்கியத்தில் நகர் என்பது நகரைக் குறிப்பதுடன் ஒரு பெரும் இல்லத்தையும் குறிக்கும். சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் நகரநம்பியர் என்ற சொல் இடம்பெறுவதைக் காணலாம்.

நகர் என்ற சொல்லைச் சிலர் வடமொழி எனக் குறிப்பிடுவர். இது தூய்மையான தமிழ்ச்சொல் ஆகும். ஆரியர் வடஇந்தியாவைக் கைப்பற்றிய காலத்தில் திராவிட மக்கள் பெரும்நகர்களில் வாழ்வதைக் கண்டு வியப்பு அடைந்தனர். திராவிட மக்களிடமிருந்தே நகர்களை அமைக்கவும் ஆரியர் கற்றுக் கொண்டனர் என தனிநாயகம் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

**திருவள்ளுவர்,**

‘பெயக் கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரியம் வேண்டுபவர்’ என்று குறிப்பிடுகின்றார்.

**நற்றினைச் செய்யுள்,**

‘முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்’ என்று கூறுகின்றது.

இவ்விரு கருத்துகளும் நாகரிகம் என்ற சொல்லைப் பண்பாடு என்ற பொருளிலேயே கையாண்டிருப்பதை அறியலாம்.

அறிவியல் நோக்கில் தமிழ்ச் சமூகம் வளர்ச்சியுற்றிராத அக்காலத்தில் அகவளர்ச்சியும் புற வளர்ச்சியும் பெரிதும் வேறுபடுத்திப் பார்க்கப்படவில்லை என்றே தோன்றுகின்றது.

நாகரிகம் என்பது நகர வாழ்வையும், நகர வாழ்க்கையால் பெறப்படும் நலன்களையும் குறிப்பதுடன் அறிவியல்துறை பொருளியல்துறை சமூகவியல்துறை என்பவற்றால் மக்கள் அடைந்துவரும் மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் குறிப்பிடவே பயன்படுத்தப்பட வேண்டும். பண்பாட்டு நடத்தைகளையும் புறஞ்சார் கருப்பொருளான நாகரிகத்தையும் பிரித்தறிந்து பயன்படுத்துதே சிறந்ததாகும்.

தமிழ்ச் சான்றோர்கள் அறிவு வளர்ச்சியை விட பண்பு வளர்ச்சிக்கே முதன்மையளித்து வந்துள்ளனர். பண்போடு தொடர்புடைய செய்கைகளையே போற்றி வந்துள்ளனர். ஓர் இனத்தின் மனம் அந்த இனத்தின் பண்புசார் நடத்தைகளாலேயே வெளிப்படுகின்றது.

வள்ளுவர் ‘பண்புடையார் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்’ என பண்புடை மக்களின் சிறப்பை விளக்குகின்றார்ர்.

மேற்கூறிய விடயங்கள் வாயிலாக, மரபு, பண்பாடு, நாகரிகம் சொற்களுக்கு பல சான்றோர்களின் கருத்துகளைச் சான்றாகக் கொண்டு விளக்கம் தரப்பட்டுள்ளது. அடுத்து வரும் கட்டுரைகள் வாயிலாக தமிழர்களின் பல்வேறு பண்பாட்டு நாகரிகக் கூறுகளையும் புலம்பெயர் மண்ணில் கொண்டொழுக வேண்டிய பண்பாட்டுக் கூறுகளைப் பற்றியும் நோக்கலாம்.●



Kumar Punithavel

# Refugee

11

My family got settled to the routine of regular hours work and rest, with my night paper delivery to generate additional income. At that time, I had accepted this is what I will be doing until retirement, when age is ripe enough to get my pension. Pretty much adhering to one of Newtons law of motions which states every body continues in its state of rest or of uniform motion unless an external force acting upon it. Me too likewise settled down to continue doing what I was doing without toppling the apple cart!

One Friday morning there was a weekend sale at Lumber Guys, and a gentleman came to me and said he was converting his basement into an apartment. We went around selecting a large consignment of fittings like bath tub, toilet, plumbing items etc. At the end of it he paid for the items bought by credit card which was worth more than thousand dollars, and asked me to hold delivery until he is ready to use them. He was a Guyanese immigrant to Canada and very much looks like a Tamil.

The very next day he came to the store again with an Afro-American gentleman accompanying him, and this time he bought lumber, dry wall and insulations etc. The person who was accompanying him was the person doing the construction. I had a chat with him mentioning I was doing the same trade before joining the lumber store. When the buyer tried to pay for the material bought that day, which came up to about two hundred and fifty dollars, his credit card failed. He called home to get the other credit card number from his wife, and she did not pick up the phone. He promised to go home and phone me the number and insisted we do the delivery on the same day so that the work may not delay. Whatever he bought the previous day to be kept in the storage until he is ready to use them.

As they were about to leave the carpenter asked me, whether he could take a bundle of insulation with him, which would cost less than twenty dollars so that he could start the work. Afterall there was materials worth more than thousand dollars that was already paid and were still to be delivered, and in order to keep the customer happy, I went down to the cashier and explained to her that the customer will call in the credit card number within an hour as the card he has is not working. I also requested her to allow them to take an insulation bundle, saying there is a large quantity already paid by the customer is still at the store.

As promised the client did call with the number within an hour and the construction materials were delivered the same day.

On Monday the manger called me over the public address system which he had never done before. My colleagues looked at me questioningly wondering what's up. When I went to his room on the second floor and greeted him, he asked me to take a seat.

Without much ado he told me. "Kumar, sorry I have to let you go". To this day I could remember the feeling I had at that moment. I could feel the blood draining down from my head, and stammered, "Why Mike, what is the reason?". For an average wage earner without any back up savings it will be the most terrific feeling he could have.  He responded, "You had helped a friend to steal material from the store". I was spell bound as I never stole in my life, and indeed it was a wrongful accusation. I immediately asked him when did I help steal material out from the store. He went on to explain that I had given a bale of insulation to a friend of mine the previous Saturday. I immediately realized he was referring to the incident when I allowed the Guyanese Canadian customer who very much looked like a Tamil. I also figured that it must be the cashier to who must have told on me.

I took Mike into the store floor and showed him the materials that was paid on Friday and still lying in the store for delivery, and also showed him the invoice of the Saturday purchase which was settled on the same day and delivery of the rest of the material done. Realizing his mistake, he felt bad and told me, "Kumar, I am sorry, now I get it. Unfortunately, I have already informed the management. Let me see what I can do". Meek as I am, I was so scared of my commitments, I made a stupid offer. I said, "Mike, instead of firing me let me resign so that so that you can rehire me again in a short time". He was pretty happy that he got off the predicament. However, he first observed that if I resign, I won't be entitled for unemployment benefit. Of course, I could have easily gone to the labour ministry, but fear was my weakness. I told him I could manage a little time before he rehires me. All this happened on the Monday morning before lunch time.

When I returned and entered the empty house, I felt very sad and nervous. I spoke to some of my close friends, and quickly got a basement detailing job on line for me to do. It was agreed I start the job the following week. In the mean time I had my auto insurance pending renewal. A friend of mine had already told me the premium at The Co-operators was very inexpensive. I called the number my friend had given, the person told me that he was busy that afternoon and gave me an appointment for the following day. ●



Amuthu Joseph Chandrakanthan

# Pondering on a Few Positive Fallouts of the Pandemic

Corona virus pandemic will go down in our history as the most formidable war being fought by human beings in the first quarter of the 21st century. People from every walk of life, whether they are white or coloured, believers or non-believers, rich or poor, employed or unemployed, healthy or ailing, young or old are called to face the uncertainty, fear and frustrations without any discrimination whatsoever.

Michael Swan an award-winning journalist compares this with the Black Death pandemic of the medieval period that killed almost half the population in Europe between 1347-51AD. He contends that plagues change the world and this pandemic is bound to change the way we live and move and have our being.

After presenting a lengthy and insightful reflection on the medieval plague, he concludes that "after the Black Death, Europe went on the Age of Discovery, By the end of the century Christopher Columbus was on his way to the new world. As the wealth of the Americas poured into Europe, the Enlightenment was born. Science redefined how we know what is true. Democracy diminished the aristocracy". He says, "for now, the world after COVID-19 can only be imagined."

My intention here is to ponder briefly on our present reality; on what life is during the pandemic as we face it day after day with so much of uncertainty and a calamitous ambiguity. I do not wish to probe or even imagine too much into the future. My fear is that we are still on the threshold and there is a long way to go!

Undoubtedly the pandemic is touching every facet of our human life locally, nationally, internationally and globally. All that is entailed by the pandemic is having an intense impact on political, social, economic, familial, personal, inter-personal, religious, spiritual, emotional, psychological, physical, cultural and even the educational aspects of life and learning.

Reflecting on the pandemic the Supreme Pontiff of the catholic Church, Pope Francis said that this is a time of great uncertainty but is also a time for inventing, creativity and an occasion for deep personal transformation.

For many self-imposed isolations have been a time of reinventing personal and family values. While the media is calling attention to a sudden increase in domestic violence, there are many who silently emphasize the quality time they spend with their families, helping children in their daily tasks, getting to know each other as parents and children; and children among themselves reminiscent of the traditional family dynamics with such cultural underpinnings as having frequent family meals with ethnic choices of dishes and tastes.

Home schooling is yet another fall out of this home-bound situation where older siblings come to the rescue of their younger ones. This has taken a positive turn with mutual support among parents and children.

In the religio-spiritual realm, according to a survey done by Angus Reid Institute "Canadians of faith are turning towards God more often than they normally would." This could well be applied to persons of all religious persuasions particularly when all places of worship are now closed thereby paving the way for a personal spiritual search and discovery. Prayer songs, yoga meditations, spiritual exhortations aby swamis and pandits are filling the social media and being liberally circulated around.

Epidemiologists from different religion, languages and ethnicities are coming out with all kinds of suggestions and recommendation based on their knowledge and experience to help and with best of intentions to share their wisdom and knowledge to help and ensure the safety of others .

The social media which was once a fanciful world of personal impersonal connectivity is slowly becoming a truly inter-personal forum of sharing of altruistic concerns where human beings are decidedly being human with a desire to be a good neighbour.

It is no wonder that the Angus Reid survey "found people more charitable and generous, taking less for granted and giving more to charity, appreciating the environment, living more simply and practising religion. "

Some are consciously turning to take food as medicine wanting to have a healthy to healthy lifestyle, cutting down on fast food and junk food.

This pandemic caused by an invisible tiny virus has certainly prompted us to be more vigilant. It has activated out spirit of introspective about us, our future and that of our families our relationships and above all our frailties and vulnerability, our direct but silent engagement with our own mortality and impermanence in this vast planet.



கவிஞர் அ. புகாரி

# என் பெயர் கொரோனா

வில்லும் நானே
அம்பும் நானே

துப்பாக்கியும் நானே
தோட்டாவும் நானே

காற்றிலும் சுழல்வேன்
கைப்பிடியிலும் காத்திருப்பேன்

இந்த
மானிட உலகமே
கண்ணுக்குத் தெரியாத
என் காலடியில்

மனித உயிர்த் தாகம்
வெறிகொண்ட என் மோகம்

தேடித் தேடித் திரிகிறேன்
தென்படுவோரையெல்லாம்
தின்று செரிக்கிறேன்

கோவில் சென்றேன்
ஒருவரையும் காணவில்லை

தேவாலயம் சென்றேன்
தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை

பள்ளிவாசல் சென்றேன்
அங்கேயும் ஏமாற்றம்

எங்கே எங்கே
என் மனிதத் தீனிகள்
எங்கே எங்கே என்று
வீடுகள் நோக்கி ஓடினேன்

அடடா
வீட்டுக்குள் மட்டும்
என்னால்
நுழையவே முடியவில்லையே

வாசலிலேயே
கழற்றி எறியப்பட்ட
கையுறைகளில்
கதறிக் கிடக்கிறேன்
வீதிகளில் நடந்த
ஓரிருவரைத் தொற்றிக்கொண்டு
வீட்டின் கதவுகள் திறந்து
விட்டேனா பார் என்ற வெறியோடு
உள்ளேயே நுழைந்துவிட்டேன்

அய்யகோ
அவசரமாய் அவர்கள்
கையைக் கழுவி கையைக் கழுவி
என் கழுத்தை அறுத்துப்
போட்டுவிட்டார்களே

யார் சொல்லித் தந்தார்
இந்தத் தந்திரத்தை

எங்கே கற்று வந்தார்கள்
இந்த மந்திரத்தை

ஆயினும்
என் வெற்றிக்காக
நான் அவர்களின்
வாசலிலேயே காத்திருக்கிறேன்

காற்றில் என் மூச்சு
சில மணிநேரம் தாங்கும்

கைப்பிடிகளில்
என் உயிர்
ஓரிருநாள் நீடிக்கும்

பிளாஸ்டிக் பொருட்களில்
என் ஆயுள்
ஒரு வாரமாவது நீளும்


ஆனால்
கதவடைத்தவர் எவரும்
வெளியில் வரவே இல்லையே

தொற்றியவனிடமிருந்து
ஊரையே தொற்றலாம் என்றால்
இந்த முகமூடி தடுக்கிறதே

இதுதான் என் கதியா
இன்னும் பதினைந்தே தினங்களில்
எனக்குச் சமாதியா
இறைவா
இது உன் சதியா
என்று கர்ஜிக்கிறேன்

அவனோ
மனிதர்களுக்கு நான்
சுயமாய்ச் சிந்திக்கும்
அறிவைத் தந்திருக்கிறேன்
நீ
போடா போ
என்று நகைக்கிறான்.

# மூத்த ஈழக்கலைஞர் ஏ. ரகுநாதன்




ஈழம் பெற்றெடுத்த மூத்த கலைஞர் ஏ. ரகுநாதன் கடந்த மாதம் 22ம் திகதி பாரிஸ் நகரில் காலமானார். தமிழ் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் நாடகப் பண்ணையில் வளர்ந்து புடம் போட்ட நடிகராகவும், திரைப்படத் தயாரிப்பாளராக -வும், இயக்குனராகவும் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர் ரகுநாதன். யாழ்ப்பாணம் நவாலியில் 1935ம் ஆண்டு பிறந்து இலங்கையில் அரசாங்க சேவையில் பணியாற்றிய போதிலும் கலையையே பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டு வாழ்ந்த கலைஞர் இவர். நிர்மலா என்ற திரைப்படத்தைத் தயாரித்து அதில் பிரதான பாத்திரமேற்று நடித்தவர். தெய்வம் தந்த வீடு திரைப்படத்தில் நாதஸ்வரக் கலைஞராக மிளிர்ந்து ரசிகர்கள் மனதில் இடம்பெற்றவர். இவரது பவளவிழா 2010ம் ஆண்டு பாரிஸ் நகரில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்த மூத்த ஒலிபரப்புக் கலைஞர் எஸ்.கே. ராஜன் ‘சுட்ட பழமும் சுடாத மண்ணும்’ என்ற மகுடத்தில் பவளவிழா மலரை வெளியிட்டு கலைஞர் ரகுநாதனுக்கு மதிப்பு வழங்கியிருந்தார். பல்லாயிரம் உயிர்களைப் பலியெடுத்து வரும் கொரோனா நோய் கலைஞர் ரகுநாதனையும் காவு கொண்டதை ஆழ்ந்த கவலையுடன் தமிழர் தகவல் பதிவு செய்கிறது.

## ஒன்ராறியோ பாடசாலைகளுக்கு மே 31 வரை விடுமுறை

ஒன்ராறியோ மாகாண அரசாங்க பாடசாலைகள் மே மாதம் 31வரை மூடப்பட்டிருக்குமென மாகாண கல்வி அமைச்சர் ஸ்ரீபன் லெஸ் அறிவித்துள்ளார். மருத்துவ அறிக்கைகளை மையப்படுத்தி தேவைப்ப-டின் பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் நாள் மேலும் நீடிக்கப்படலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

S. Raymond Rajabalan



# Pandemics That Changed History

As human civilizations progressed a number of dangerous diseases have struck them down throughout the past centuries claiming thousands of lives. However the recent spread of corona virus has caused unprecedented level of panic and fear all over the world. This article provides a summary of the various deadly diseases that affected the humanity throughout the past centuries.

**Epidemics and Pandemics**

. When an epidemic spreads beyond a country's borders, that's when the disease officially becomes a pandemic.

Timeline of pandemics that, changed history.

**430 B.C.: Athens**

The earliest recorded pandemic happened during the Peloponnesian War as much as two-thirds of the population died.

**165 A.D.: Antonine Plague**

The Antonine plague was possibly an early appearance of smallpox that began with a group of nomadic warriors called Huns this plague continued until about 180 A.D., claiming Emperor Marcus Aurelius as one of its victims.

**250 A.D.: Cyprian Plague**

Named after the first known victim Saint Cyprian, the Christian bishop of Carthage, the Cyprian plague e claimed a number of lives...

**541 A.D.: Justinian Plague**

First appearing in Egypt, the Justinian plague spread through Palestine and the Byzantine Empire, and then throughout the Mediterranean.. It is also credited with creating an apocalyptic atmosphere that spurred the rapid spread of Christianity. Recurrences over the next two centuries eventually killed about 50 million people...

**11th Century: Leprosy**

Though it had been around for ages, leprosy grew into a pandemic in Europe in the middle Ages.

**1350: The Black Death**

Responsible for the death of one-third of the world population, this second large outbreak of Black Death was also known as the Bubonic plague...

**1492: The Columbian Exchange**

Following the arrival of the Spanish in the Caribbean, diseases such as smallpox, measles and bubonic plague were passed along to the native populations by the Europeans.

In 1520, the Aztec Empire that originated from the nomadic tribes of northern Mexico was destroyed by a smallpox infection brought by African slaves.

**1665: The Great Plague of London**

In another devastating appearance, the bubonic plague led to the deaths of 20 percent of London's population... The worst of the outbreak tapered off in the fall of 1666, around the same time as another destructive event—the Great Fire of London.

**1817: First Cholera Pandemic**

There were seven cholera pandemics over the next 150 years, this wave of the small intestine infection originated in Russia, where one million people died. A vaccine was created in 1885, but pandemics continued.

**1855: The Third Plague Pandemic**

Starting in China and moving to India and Hong Kong, the bubonic plague claimed 15 million victims. The pandemic was considered active until 1960 when cases dropped below a couple hundred.

**1875: Fiji Measles Pandemic**

After Fiji ceded to the British Empire, a royal party that visited Australia brought the disease back to their island, and it was spread further by the tribal heads and police who met with them upon their return.

One-third of Fiji's population, a total of 40,000 people died.

**1889: Russian Flu**

The first significant flu pandemic started in Siberia and Kazakhstan, traveled to Moscow, and made its way into Finland and then Poland, where it moved into the rest of Europe. By the following year, it had crossed the ocean into North America and Africa. By the end of 1890, 360,000 had died.

**1918: Spanish Flu**

The avian-borne flu that resulted in 50 million deaths worldwide, the Spanish flu is theorized to have originated in China and spread up to USA 'After causing the deaths of thousands of Americans the flu threat disappeared in the summer of 1919...

**1957: Asian flu**

Starting in Hong Kong and spreading throughout China and then into the United States, the Asian flu became widespread in England where, over six months, 14,000 people died. A second wave followed in early 1958, causing an estimated total of about 1.1 million deaths globally, with 116,000 deaths in the United States alone. A vaccine was developed, effectively containing the pandemic.

**1981: HIV/AIDS**

AIDS was first observed in American gay communities but is believed to have developed from a chimpanzee virus from West Africa in the 1920s. The disease, which spreads through certain body fluids, moved to Haiti in the 1960s, and then New York and San Francisco in the 1970s.Treatments have been developed to slow the progress of the disease, but 35 million people worldwide have died of AIDS since its discovery, and a cure is yet to be found.

**2003: SARS**

First identified in 2003 after several months of cases, Severe Acute Respiratory Syndrome (SARS) is believed to have possibly started with bats, spread to cats and then to humans in China, followed by 26 other countries, infecting 8,096 people, with 774 deaths.

SARS was seen by global health professionals as a wake-up call to improve outbreak responses, and lessons from the pandemic were used to keep diseases like H1N1, Ebola and Zika under control.

**Corona Virus (COVID-19)**

On March 11, 2020, the World Health Organization announced that the COVID-19 virus was officially a pandemic.

The very first case in China appeared November 17, 2019. Without a vaccine available, the virus spread throughout the globe, affecting more than 190 countries.

On February 11, the infection was officially christened COVID-19. Meanwhile this disease continues to spread throughout the world with no end in sight.

## AN APPRECIATION
# DR. ANTON SEBASTIAN



Dr. Anton Sebastian, fondly known to many as Thilagar fell a victim to CORONA-VD-19 in London, U.K. on April 04, 2020 while volunteering to work for the British NHS at the Kingston Hospital in London. He was a retired Consultant Physician in London but answered the call from NHS to serve the needy at a time of great crisis in the country. While treating an infected patient he contacted the virus and succumbed.

Thilagan, born in the city of Kandy, Sri Lanka, on January 23, 1945 to Dr. Gregory and Josephine Sebastiampillai, studied at St. Sylvester's College and qualified from the Peradeniya University as a Doctor of Medicine in 1967. His father was a Registered Medical Practitioner Known as Apothecary in earlier times. He had retired early to run a Nursing Home which catered to the needy in the city. While in the University, Thilagan met a charming girl, Vasanthy Reginald, a University student and later married her.

After a short stint in the Northern town of Jaffna as a Medical Practitioner, Thilagan moved to London U.K. after the civil riots of 1983 with his family. He later qualified as a Fellow of the Royal College of Physicians in London and worked for a short while with the NHS. When he got a good job offer from a leading hospital in the city of Jeddah, Kingdom of Saudi Arabia, he accepted the offer and worked there for more than a decade. He was a well-known Physician in the Kingdom even treating members of the Royal family. On his return to London, he became a Consultant Physician and soon became widely known for his prowess and even had a clinic down Harley Street, the centre of eminent Physicians.

Thilagan was a Doctor of Medicine but did not confine himself to Medicine. While always tending the sick he found time to engage in several hobbies and literary efforts. He authored several books on medicine including one titled 'History of Medicine' which was a pioneer effort by a Doctor of Medicine. This apart, his hobbies included other fields like collection of ancient books, coins antiques, stamps and what not. You will find shelves and shelves of well-bound books in his spacious home in Surbiton, Surrey. On my last visit to his home around five years back, I was treated to a fiesta of all his collections which included classic old cars. His collection actually astounded me. It struck me that he is one who could squeeze a 48 hour work into a 24 hour day. Amidst his encompassing work, he would find time to enjoy music and play the Piano to relax with his family. He was a dedicated family man

After retirement, Thilagan developed a passion for history and decided that he should explore the history of his motherland Sri Lanka. He went to Sri Lanka and toured the island even visiting several Buddhist temples and monasteries and spending the nights there. He told me that he was warmly received at every Temple he visited and had the opportunity to refer to ancient ola books. After a painstaking effort which was really herculean, he came out with a real masterpiece 'An Illustrated History of Sri Lanka' a massive volume of historical data which virtually stunned all readers. How he could have assembled all the data that had gone into this book remains a wonder. Medicine and History are poles apart but in Thilagan's life the poles had met. The book which had earned the encomiums of historians, academics, professionals and even politicians has seen four editions, all of which were sold out in no time.

Thilagan was a Director of 'Goodness Foundation', a worldwide institution formed to assist under-privileged people. Under this institution, he took the initiative in setting up a school in the village of Mathagal ( from where his wife hailed) where needy students are taught computer and other skills like typing, sewing and tailoring free of charge. He was a visionary indeed.

God had blessed Thilagan with an intellect and abundant talents and skill all of which he has used for the benefit of humanity. More than that, God has also bestowed on him noble qualities of humility, equanimity, compassion and genuine love for fellow human beings irrespective of class or status all of which were always part of his life. Eventually he died, as he lived, for others.

His death is an irreparable tragedy to his grieving family but they can take comfort from the fact that he is being hailed by thousands as one who had sacrificed his life in the service of humanity.

May His Soul Rest in Peace and let the earth lie softly on his turf forever.

**- Benedict Thomas (Benny)**

# அம்புலன்ஸ் வண்டியில் கொரோனா சிகிச்சை



இலங்கையில் கொரோனா தொற்று கடந்த மாத இறுதியில் வேகம் கொண்டது. இதனால் நடமாடும் மருத்துவ சேவை பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கிலங்கையின் காரைதீவு கிராமத்தில் நடமாடும் அம்புலன்ஸ் வண்டியின் மருத்துவப் பிரிவினர் நோயாளிகளைப் பரிசோதனை செய்தனர்.



Dr. Joe Vipond

# The case for mandatory mask-wearing in Canada

As the death statistics continue to grow higher in Canada and around the world, there are corners where the curve has been flattened immensely. And the thing those jurisdictions have in common is universal mandatory masking.

An amazing but little-discussed fact: no country which has imposed mandatory masking has been overwhelmed by the pandemic. Moreover, in Asian countries, that policy has had far less economic impact than the lengthy lockdowns imposed by Western nations.

But there has been great resistance outside of Asia to making non-medical, homemade masks mandatory, with no end of excuses why requiring face-coverings for all people in public settings couldn't possibly work here. "It's cultural," we're told (non-Asians would just never accept masks). Or "there is no possible way we could teach people to wear them safely" (despite the fact that we seem to successfully be able to teach people to drive cars). Or "the evidence is weak" (when in fact the evidence is growing stronger every day). Masks, we are told, are no substitute for physical distancing (although plenty of countries have instituted physical distancing without successfully bending the curve).

In the last few weeks, our public health officials have started to become more receptive to the idea that masks may play a role in the pandemic, with first the CDC in the U.S. recommending them for public settings where distancing is difficult, then Dr. Theresa Tam and the Public Health Agency of Canada endorsing mask-wearing on a voluntary basis.

This change has come as a result of the increasing concern over asymptomatic and pre-symptomatic spread. It is now evident that transmission is occurring in no small part from people who feel completely normal. As such, it has become necessary for everyone to treat everyone as if they are infected.

And although the safest place for individuals to be is in their own home, not exposing themselves to others, that is not an option for many, who cannot avoid leaving their houses for essential work, or the occasional grocery run. So masking, in addition to physical distancing and copious hand hygiene, would assist in preventing covid transmission for these individuals.

And indeed, masks are becoming more evident on the streets of Canada. But far from everybody is wearing them.



Now, however, a population-level experiment on public health is unfolding in central Europe. In the Czech Republic, a grassroots movement was launched in mid-March to convince the entire population to wear masks. On March 19 it became mandatory for all citizens to wear masks outside the home. This is the first non-Asian country to enact such a policy, and it allows a comparison of how this policy affects covid mortality between nations.

Twenty-three days later—the sum of the amount of time it takes for someone to go from being infected with COVID-19 to dying from the disease, on average—those masks should have reduced the mortality rate in the Czech Republic. And, sure enough, the three-day average mortality rate started going down after April 9, and is now precipitously dropping.

This is powerful evidence that masking works. And we may soon have similar evidence from the Czechs' neighbours in Austria. That country made masking mandatory on March 30 and is already seeing their mortality curve bending downward. Another neighbour, Poland, was slower to implement such rules, instituting a mandatory policy on April 16. It shows no similar bend—yet.

Notably, Austria and the Czech Republic have now started, slowly, to reopen parts of their economies. And it is likely that even as other restrictions are removed, masking will remain for a long, long time.

There is no more important policy at this moment than one that prevents needless deaths. While non-medical, homemade masks are becoming more common around Canada, we have the evidence we need that making them mandatory saves lives. #Masks4allCanadians.

*(Dr. Joe Vipond is an emergency room physician, and a clinical assistant professor at the University of Calgary.)*

## கனடா மொன்சூன் ஜேர்னல் பத்திரிகையில்
## தமிழர் தகவல் 29வது ஆண்டு விருது விழா

# TAMILS INFORMATION'S 29TH ANNUAL CELEBRATION - AN OVERVIEW




Award Recipients

*By: Raymond Rajabalan*

Punctuality, Effective coordination of the agenda, Seamless flow of the scheduled events all which had become the trademarks of the Annual Celebration of the prestigious Tamils information Journal was once again clearly evident during this year's event held on February 9th at Toronto City Hall. This unique function which has continuously earned the respect of so many for its perfectness once again proved to be a great success. Having held this event for the past 29 years at the very same location, this prestigious function has effectively evolved to be a flawlessly executed event and this year's function was no exception.

This yearly event whose main aim has always been recognising and awarding those who have excelled in various fields has honoured more than 200 talented personalities from Canada as well as various parts of the globe since the inception of this unique event 29 years ago.

The event which as usual commenced exactly at 3.00 pm was well attended and the cavernous auditorium of the city Council chamber was packed to capacity with the appreciative audience drawn from all walks of life.

While the program was held according to the usual structured plan, yet as in the past every year this year's event too has succeeded in introducing some novel ideas.

The Annual Magazine was released during session I of the program held in Tamil and chaired by **Ajanthie Mathanakaran,** a Teacher attached to Toronto District School Board while the awards were distributed during Session 2 chaired by **Neethan Shan** (Executive Director of Urban Alliance on Race Relation), with the Chief guest being Hon. **Todd Smith** MPP, Ontario Minister for Children ,Community and Social Services.

The Honourable Minister Todd Smith was **honored with 'History Maker Award' for his outstanding contribution to pass the bill in Ontario Parliament in 2014 to proclaim January as Tamil Heritage month,** after which he distributed awards to eight recipients - **Sinnathamby Sittampalam** (Lifetime Achievement Award), **S. K. Rajen** (Outstanding Media Award), **Saatumathy Manokanthan** (Music Award), **Thevathas Shanmugalingam** (Pioneer Entrepreneur ward), **Saranya Jeyakanthan** (Youth Achievement Award), **Murugesu Packiyanathan** (Literary Award), **Vadivelu Poologendran** (Entrepreneurship Award) **Sasikala Narenthiran** (Cultural Enrichment Award).




Minister Todd Smith being presented with History Maker Award

Towards the end of the distribution of the awards Mr. Sittampalam gave an emotional speech on behalf of the Award Recipients.

Overall it was obvious that Thiru Thiruchelvam, the chief editor of Tamils Information journal who had recently completed 50 years of journalistic experience has once again effectively combined his many years of organising ability to stage a great event.

As usual, at the close of the two hour program the audience were invited to participate in the reception during which the eagerly awaited Annual issue of the Journal was distributed bringing the superbly planned function to a perfect finish.



**Mr. Sittampalam** receiving Award



IBC Broadcaster **S. K. Rajen receiving Award**



**Saranya Jeyakanthan** receiving Award

# ஐம்பதாவது பிறந்தநாள் நினைவு

## எங்கள் உயிருக்கு உயிரானவனே!
## நீ எங்கே இருக்கிறாய்! இப்போது என்ன செய்கிறாய்!

தனயனாக
05-05-1970



தந்தைக்காக
10-05-1989

## செல்வன் எஸ். தி. அகிலன்


யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவன்; விளையாட்டு வீரன்

அகவையது ஐம்பதடா அகிலா இன்று
அருகிருத்தி முத்தமிட நீயோ இல்லை
மிகமனது நோகுதடா மகனே இங்கே
மேனியிது பத்தொன்பது மட்டும் தானோ
மகவுநிலை இளம்பருவம் போல எங்கள்
மனங்குளிர எம்மருகில் இருந்தி டாமல்
முகமறைய எங்குசென்று இருக்கின் றாயோ
முப்போதும் வந்தெம்மைப் பார்க்கின் றாயோ
புகமுடியா நினைவுகளில் உன்னைத் தேடிப்
போகிறதே எம்மனதும் ஆனால் நீயோ
நிகழ்ந்ததெலாம் கனவினிலே தினமும் காட்டி
நித்திரையில் சிரிக்கின்றாய் இமைக்குள் நின்றே!

நெஞ்சகத்தில் உன்நினைவைத் தாங்கிக் கொண்டு
நெடுந்தூரம் நடக்கின்றோம் அகிலா நாங்கள்
அஞ்சுபத்து முப்பதல்ல அதற்கும் மேலே
ஆயிரங்கள் என்றாலும் சுமப்போம் நாங்கள்
நஞ்சுமன ஒட்டுக்குழு பிறரைச் சேர்த்து
நடத்திவைத்த பாதகத்தில் தனித்து நின்று
பிஞ்சுமன அபிமன்யுத் தனயன் போல
பெற்றவர்கள் உயிர்காத்து நிலத்தில் சாய்ந்தாய்
மஞ்சுமுகில் வான்வெளியில் அகிலா இன்று
எங்கிருப்பாய் என்னசெய்வாய் என்றே நாங்கள்
கெஞ்சுகிறோம் உன்னிடமே உனையும் விட்டால்
கேட்பதற்கோர் புகலிடந்தான் எமக்கு யாதோ!

அம்மா, அப்பா
குடும்ப உறவினர்கள், நண்பர்கள்
416.920.9250


MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS
Markham McNicoll Urgent Care Centre (MMUCC)
WALK-IN CLINIC
(OPEN ALL 365 DAYS OF THE YEAR)
Unit - 11
416-609-3333
Markham McNicoll Family Care Clinic (MMFCC)
(OPEN EVERYDAY EXCEPT SUNDAYS & HOLIDAYS)
Unit - 6
416-292-6666
2901 Markham Road, Scarborough, ON M1X 0B6
www.medcentrehealth.com


SECURITY must be
your top PRIORITY
Get Insurance for your own SECURITY...
RRSP & RESP
SUPER VISAS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
125 Topflight Dr, 2nd floor, Mississauga ON. L5S 1Y1
647 401 5800 / 416 439 2800


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
முதலாவது கனடியத்தமிழ் Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
Tel: 647-702-2159
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
தங்க நகை அடவு சேவை குறைந்த வட்டி வீதம்
தங்கமகள் சேமிப்பு திட்டத்தில்
இணையும் அனைவருக்கும் $1500
பெறுமதியன நகையை பொற்றுக்கொள்ளமுடியும்
6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7
Telephone: 647-702-2159 / 647-947-2864
NewRanganasJewellery
newranganasjewelhouse.com


OIL CHANGE SPECIAL $19.95
Semi-Synthetic Oil Change includes:
+ Tax & Disposal Fees
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
2nd Location
GRAND OPENING
MY MECHANIC
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca







# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

**சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்**

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 8:00 / M | அறுகம் புல் | $ 5:00 / Bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 4:00 / M | வில்வம் இலை | $ 5:00 / Bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 9:00 / M | வேப்பிலை | $ 5:00 / Bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0:35/Each | Marukhalundu /Maru | $ 5:00 / Bag |
| மல்லிகை மலர்கள் | $ 5:00 / Bag | மாவிலை | $ 2:50 / Bag |
| சம்பாகினி மலர்கள் | $ 5:00 / Bag | வெற்றிலை | $ 2:50 / Bag |
| அறலி மலர்கள் | $ 5:00 / Bag | வாழை இலை | $ 1:25 / Each |
| தாமரை மலர்கள் | $ 1:25 / Each | துளசி இலை | $ 3:00 / Bag |

* Price subject to change Fancy Florist without notice.



# SABESAN'S Choice

We design and build your dream homes

**Additions and Custom build homes**






"நீங்கள் விரும்பும் இல்லம் அமைத்திட"
**சபேசன்**
விருதுகள் பெற்ற நிபுணர்
**416 605 1990**

Custom made
Solid Wood
Kitchen Cabinets
Flooring
Granite counter-tops...

Financing available *OAC



எஸ். ராஜ்மோகன்

## பணிலமாடம் 64

# கடவுளுக்கும் மேலானவர்கள்!

ஒரு பிரபல்யமான வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள பிரசவப் பிரிவு பலத்த கட்டுப்பாடுகளுடன் இயங்கிக் கொண்டிருந்தது. கொரோனா வைரஸ் காரணமாக உயிர்களை இழந்து கொண்டிருக்கும் உலகுக்குப் புதிய உயிர்களைப் பாதுகாப்பாக அறிமுகப்படுத்தும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தது. பிரசவ வலியுடன் வரும் தாய்மார்களுடன் ஒருவர் மட்டுமே உதவிக்கு உள்ளே செல்ல முடியும். அப்படிச் செல்பவர் பிரசவம் முடியும் வரை வைத்தியசாலையை விட்டு வெளியே செல்ல முடியாது. அப்படி வெளியே சென்றால் மீண்டும் உள்ளே செல்ல அனுமதி கிடைக்காது. இது போன்று விதிக்கப்பட்டுள்ள பல அசௌகரியமான கட்டுப்பாடுகள் பிரசவப் பிரிவில் தங்கியிருப் - பவர்களுக்கு பெரும் பாதுகாப்பையும், நிம்மதியையும் மனதில் உருவாக்கியிருந்ததை மறுக்க முடியாது.

அங்கு பிரசவப் பிரிவைத் துப்பரவு செய்யும் பணியில் ஒரு பெண் மிகவும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். குழந்தைகள் தங்கும் அறைகளையும், அவர்களின் தொடுகையில் உள்ள உபகரணங்களையும் துப்பரவு செய்யும் போது அந்தப் பெண் மிகவும் அவதானமாகவும், மிகுந்த நுணுக்கத்துடனும் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, கடமையுணர்ச்சியின் மொத்த உருவமாக அவர் தோன்றினார். கிட்டத்தட்ட அறுபத்தைந்து வயதிருக்கும் அவரின் செயற்பாடுகள் யாவும் எனக்கு மிகவும் வித்தியாசமாகவே தோன்றியது. 'உங்களுக்கு எமது நன்றி' என்று அவரது கவனத்தைத் திசை திருப்பியபோது என்னை ஒரு தடவை திருப்பிப் பார்த்தார். 'உங்களை-யெல்லாம் கடவுளுக்கும் மேலானவர்களாக நினைக்கும் காலம் வந்துவிட்டது' என்று நான் மனமுருகி நின்றபோது பெருமூச்சுடன் மெல்லியதாகச் சிரித்தார்.

'பார்த்தீர்களா மருந்தை விட துப்பரவுதான் இன்றைக்கு உலகத்தைக் காப்பாற்றுகின்றது' என்று சிரித்தபடி கூறிய அவரது கதை பழைய கதைதான். ஆனால், எனக்குப் புதிதாக இருந்தது.

2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழில்நுட்ப முன்னேற்றங்களில் முகங்களைப் புதைத்தபடி எதிர்காலக் கனவுகளுடன் வாழ்ந்த போதுதான் சார்ஸ் என்ற வைரஸ் உலகை உலுக்கியது. அன்று சார்ஸ் எழுப்பிய அதே கேள்விகளைப் போலவே இன்று கொரோனா எழுப்பும் கேள்விகளும் முழுமையாக ஒத்திருக்கின்றன. சார்ஸ் நோய்க்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், இன்று கொரோனாவுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பெருமளவில் ஒன்றாகவே இருக்கின்றன. அன்று சார்ஸ் மூலம் உலகெங்கும் மனிதர்கள் செத்து மடியும்போது சொல்லொணாத் துயரத்தில் நாங்கள் எல்லாம் ஆழ்ந்திருந்தோம். அரசாங்கங்கள் பல கட்டமைப்புகளைச் செயற்படுத்தி, மிகவும் சிரமப்பட்டு சார்ஸ்க்கு எதிரான போராட்டத்தை நடைமுறைப் படுத்தியிருந்தன. மக்கள் நடமாட்டம் குறைந்து வைத்திய சாலைகள் யாவும் வெறிச்சோடிப்போய்க் கிடந்தன. இறுதியில் அதிலிருந்து வெற்றியும் கண்டுகொண்டோம். ஆனால், மீண்டும் இப்படி ஒரு நிலை வரக்கூடும் என்ற அனுபவப் பாடத்தை எவருமே அதில் இருந்து கற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

அப்பொழுதும் நான் இந்த வைத்தியசாலையில்தான் வேலை செய்தேன். என்னை வேலைக்குப் போக வேண்டாம் என்று அப்பொழுதும் என்னை எனது குடும்பத்தினர் வற்புறுத்தியிருந்தார்கள். அதேபோல் இப்பொழுதும் என்னை வற்புறுத்துகின்றார்கள். ஆனால், என்னைச் சுற்றியுள்ள அனைவரும் துன்பத்தில் துவண்டு கொண்டிருக் - கும்போது நான் மட்டும் எப்படி சுயநலமாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்க முடியும் என்ற நினைப்புத்தான் என்னை இங்கே கொண்டுவந்து நிற்க வைத்திருக்கின்றது.

சார்ஸ் காலத்தை வெற்றிகொண்ட நிம்மதியில் நாங்கள் மறந்துபோன அனுபவப் பாடங்கள்தான் இன்று கொரோனாவை மீண்டும் கொண்டு வந்திருக்கின்றது. சார்ஸ் தந்த அனுபவப் பாடங்களை மக்கள் மட்டுமல்ல மக்களின் அரசாங்கங்களே மறந்துவிட்டன. பாடசாலைப் பாடவிதானத்திலும் இது பற்றிய முன்னெச்சரிக்கை விடயங்கள் அடக்கப்படவில்லை. இப்படியிருக்கும் போது வைரஸ்கள் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வை எப்படி அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல முடியும்?

சார்ஸ் தாக்கத்தை முறியடித்த வெற்றியில் எனக்கு உடன்பாடு இல்லை. எனது அறிவின்படி இந்த வைரஸ்கள் எல்லாம் சில, பல வருடங்கள் உறங்கு நிலையில் இருந்துவிட்டு புதிய மெருகுடன், புதிய சக்தி கொண்டு மீண்டும் ஒரு நாள் வெளிவரும் என்றுதான் நம்புகின்றேன். நான் துப்பரவுப் பணி செய்யும் போதெல்லாம் அழுக்குகள் எனது கண்ணுக்குத் தெரிவதில்லை. கிருமிகள்தான் கண்ணுக்குத் தெரிகின்றன. இந்தக் கொரோனா வைரஸ்களும் பல மக்களின் உயிர்களை எடுத்துவிட்டு சிறுகாலத்தில் ஓய்வுக்குப் போய்விடும். அந்த நேரத்தில்தான் தடுப்பூசிகளும் அறிமுகப்படுத்தப்படும். ஆனால், மீண்டும் ஒரு நாள் இன்னொரு வடிவில் தடுப்பூசிகளுக்கு அடங்காமல் அது எழுச்சி கொள்ளும். அப்பொழுது அதற்கு இன்னுமொரு பெயரும் வைப்போம். மீண்டும் அது பல உயிர்களை காவு கொள்ளும். அதில் நானும் ஒராளாகக் கூட இருக்கலாம் என்ற பெருமுச்சுடன் பணிக்கு திரும்பினார் அந்தப் பெண்மணி.

நீண்டதொரு பெருமூச்சுடன் நானும் அவருக்கு நன்றி கூறி விடைகொடுத்தேன். அவரை கொரோனாவைக் கட்டுப்படுத்தும் குழுவினருக்கும் மேலான இடத்தில் வைக்க வேண்டும் போல் தோன்றியது. ஒரு வேளை நாங்கள் எல்லாம் அனுபவப் பாடங்கள் மூலம் முன்னெச்சரிக்கையாக இருந்திருந்தால் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

நாம் காணும் உலகில் எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், நோய்கிருமிகள் தலைதூக்கலாம். மீண்டும் வீரியம் கொண்டு மனிதகுலத்தை அழிக்கலாம். ஆனால், அவை தலைதூக்காமல் இருக்க வேண்டுமானால் அனைவரும் வருமுன் காக்கும் முனைப்புடன் செயல்பட வேண்டும்!



சாத்தான்குளம் அப்துல் ஜப்பார்

# ரஜனி என்னும் ஒரு மாயை

திரை உலகில் தியாகராஜ பாகவதருடையது ஒரு சகாப்தம். அதுபோன்ற ஒன்று தான் பி.யூ.சின்னப்பாவுடையது. பிறகு M.G.R. வந்தார். சிவாஜி வந்தார். முன்னவர் இருவருக்கும் அரசியல் ஆசை என்பது இருந்ததில்லை. ஆனால் பின்னவர்களுக்கு அது நிறையவே இருந்தது. சினிமா. அரசியலில் சிவாஜி எதிர்பார்த்த அளவு சோபிக்கவில்லை ஆனால் MGR ஆட்சியைக் கைப்பற்றி கோலோச்சும் அளவுக்கு உயர்ந்தார். சினிமா கவர்ச்சியை மட்டுமே கைமுதலாகக் கொண்டு அவரைத் தொடர்ந்து அரசியலில் மிகப் பெரிய ஈர்ப்பை ஏற்படுத்தியவர் ஜெயலலிதா. காலம் அவர்களைக் காவு வாங்கிக் கொண்டது. தொடர்ந்து ஏற்பட்டது ஒரு வெற்றிடம்!

இப்போது நடக்கும் போட்டா போட்டி காட்டா குஸ்தியெல்லாம் அந்த வெற்றிடத்தை கைப்பற்றத்தான்.. அதில் முன்னணியில் நிற்கிறார் ரஜனி. அவர் அரசியல்வாதியா - ஆன்மிக நேசரா - கலை உலக பிரம்மாவா அல்லது கபட வேடதாரியா? எல்லாம்தான் என்று சொல்லுமளவுக்கு இருக்கிறது அவரது சொல் - செயல் - நடவடிக்கைகள் எல்லாம். அவரது பேச்சுக்களில் விசயம் இருக்கிறதோ இல்லையோ வி'மம் இருக்காது. இவ்வளவு ஈர்ப்புள்ள ஒருவரது பேச்சில் அதுவும் இருந்ததோ வேறு வினையே வேண்டாம்.

அரசியலுக்கு இன்று வருகிறேன் நாளை வருகிறேன் என்று 'படம்' காட்டிக் கொண்டிருக்கிறாரே தவிர உருப்படியாக எதுவும் செய்யவில்லை என்பது குற்றச்சாட்டு. ஆனால் அவரோ நான் அவ்வளவு காலத்துக்கு முன்பெல்லாம் என் அரசியல் ஆசையை வெளிப்படுத்தவில்லை 2017-ல் தான் வெளிப்படுத்தினேன். இதோ அரசியலுக்கு வந்தும் விட்டேன். என் ஆலோசகர்களோடு ஆதரவாளர்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன். வெகு விரைவில் கட்சியின் பெயர் - கொடி - கொள்கை - திட்டம் ஆகியவற்றை அறிவிப்பேன் என்று சொன்னதோடு தற்காலிகமாக ஒரு இடைவெளி விட்டிருக்கலாம். - விடவில்லை. அங்குதான் பூனைக்குட்டி சாக்குப்பையை விட்டு வெளியில் வந்து விட்டது.

நான் நிச்சயமாக முதல்வர் பதவிக்கு வரமாட்டேன். கட்சி இரண்டாகப் பிரிக்கப்படும் ஒன்று ஆட்சியை கவனிக்கும் மற்றது கட்சியை கவனிக்கும். அதனால் ஊழல் நடைபெற முடியாது.

அதிமுக - திமுக ஆகிய கட்சிகளில் அடி முதல் நுனிவரை நிர்வாகிகள் என்ற பெயரில் ஐம்பது அறுபது ஆயிரம் பேர்வரை இருக்கிறார்கள். அது தேவை இல்லை. நானும் கூட தேர்தல் சமயத்தில் ஐம்பது அறுபது ஆயிரம் பேரை தேர்தல் சமயத்தில் நிர்வாகிகளாக நியமிப்பேன். தேர்தல் முடிந்ததும் அவர்களை கழற்றி விட்டு விடுவேன். கட்சி நடத்த அத்தனை பேர் தேவையில்லை என்கிறார்.

இங்குதான் அவரது சறுக்கல் ஆரம்பமாகிறது. தமிழகத்தைப் பற்றியும் தமிழக அரசியலைப் பற்றியும் மக்களின் போக்கு பற்றியும் சரியான புரிதல் அவருக்கு இல்லை என்பது எனது கருத்து மட்டுமல்ல. ஒட்டு மொத்த ஊடகங்களின் கருத்துமாகும். அவரது பேச்சுக்களில் தத்துவமும் இருக்கும் தர்மசங்கடமும் இருக்கும். தெளிவு என்பது தான் துளியும் இருக்காது.

'கோச்சடையான்' திரைப்படம் தான் நினைவுக்கு வருகிறது. ரஜனியை ரத்தமும் சதையுமாகப் பார்த்தவர்கள் பொம்மை உருவைக்கண்டதும் ஏமாந்து போனார்கள். படமும் படுதோல்வி அடைந்தது. அது போல ரஜனியை முதல்வராக கற்பனை செய்து கொண்டிருப்பவர்கள் மத்தியில் நானல்ல முதல்வர் வேறொருவர் என்னிடத்தில் இருப்பார் என்று சொன்னால்...
அது தோல்விக்கு அச்சாரம் கொடுத்த மாதிரித்தான் அதில் பிழை இருப்பது போல் தோன்றவில்லை. ஆனால் ரஜனியில் நிலைப்பாடு அவர் கூறுவது போல் இருக்கப்போகிறது என்று சொன்னால் ரஜனியின் கனவுகளை கடவுள் ஒருவரால் மட்டுமே கலைக்காதிருக்க முடியும்.

'அண்ணாத்தே' படம் கொரோனொவால் தீபாவளிக்குத் தள்ளிப் பொகிறது. அதற்கு அடுத்து ரஜனிக்காக கமல் தயாரிக்கும் படம் வரிசையில் நிற்கிறது. தன்னுடைய கடைசிப் படம் ஒரு விவசாயியைப் பற்றி இருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறாராம். விளங்கும்... இவர் எப்ப கட்சி ஆரம்பித்து... எப்ப பெயர் சூட்டி... எப்ப நிர்வாகி-களைத் தேர்ந்தெடுத்து... கட்சியை பதிவு செய்து... ஓரிரு நாட்களில் நடக்கக் கூடிய சங்கதியா?

அதிருக்கட்டும்... ஏன் பதற்றம் 2021-ல் மட்டும் தானா தேர்தல்? ஏன், 2025-ல் ஒரு கை பார்க்க மாட்டோமா......பார்ப்பீங்க வெகுநிதானமாகப் பார்ப்பீங்க......ஆனால் நீங்கள் கொண்டை மினுக்கி அரிவாள் தீட்டு முன்பு உள்ள பதநீரும் கள்ளாய் போகாமல் இருந்தால் சரி.

## முதியோர் பராமரிப்பு இல்லங்களில் கனடிய இராணுவத்தினர் பணி



ஒன்ராறியோ மற்றும் கியுபெக் மாகாணங்களில் கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணித்தோர் தொகையின் மொத்த எண்ணிக் - கையில் சுமார் எண்பது வீதத்தினர் இங்கு வசித்து வந்தவர்கள். இதனால் இந்த இல்லங்களில் பணியாற்றவென இரண்டு மாகாண அரசாங்கங்களும் கேட்டதற்கிணங்க கனடிய இராணுவத்தினர் அத்தியாவசிய பணிகளை மேற்கொண்டுள்ளனர்.


உங்களுக்குத் தெரியும்,

நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

தகுதியான வெற்றிகளுக்கான

தரமான தெரிவு

On high with your thoughts



PROMAR Ltd.

AWARDS & PROMOTIONS

நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்

இப்பொழுது

வீடு விற்பனைத்

துறையிலும்

www.promarawards.com 416-291 2344

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB



‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன்

# கடவுளைப் பார்த்தவர்கள்

சிலரோடு உரையாடும்போது அவர்கள் தாங்கள் கடவுளைக் கண்டதாக அடித்துக் கூறுவார்கள். அவர்கள் கூறுவதைப் பார்த்தால் எங்களால் நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அந்தளவுக்கு தத்ரூபமாகக் கூறுவார்கள்.

அவர்கள் பொய் சொல்கிறார்களா அல்லது உண்மையைச் சொல்கிறார்களா என்பதனை அறிய முடியாமல் இருக்கும். மனித மூளையின் செயற்பாட்டை அறிந்தால் மட்டுமே இந்தப் புதிருக்கு விடை காண முடியும்.

மூளையின் நடுப்பகுதியிலுள்ள தலமஸ் என்ற பகுதியில் இருக்கும் கொத்துக் கொத்தான செல்களைத் தூண்டினால் தீவிரமான மகிழ்ச்சியை உண்டாக்க முடியும் என்கிறது உளவியல். இறைவனைக் காண்பதாகக் கூறுபவர்கள் இவ்வாறான கிளர்ச்சியை அனுபவித்து அதனை நினைத்துக் கொள்கிறார்கள் போலும்.

1935ம் ஆண்டு ஜேம்ஸ் பாபெஜ் என்ற உடற்கூற்று நிபுணர் வெறிநாய்க் கடியால் இறந்தவர்கள் மரணமடைவதற்கு முன்னர் கடும் கோபம் உள்ளவர்களாக இருப்பதை அறிந்தார். மூளையை அறுவைச் சிகிச்சை செய்து பார்த்தபோது அதற்கான வைரசுகள் கொத்துக் கொத்தாக நரம்பு செல்களுக்குள் சென்றிருப்பதைக் கண்டார். அதனை லிம்ஃபாடிக் அமைப்பு என பெயரிட்டிருந்தார். எனவே ஆக்ரோசமான இழப்புகளுக்கு வெறிநாயால் தாக்கப்பட்டவர்கள் உட்பட்டிருந்ததற்கு இதுவே காரணமென அறிந்தார்.

லிம்ஃபாடிக் பகுதி என்பது பார்ப்பது, தொடுவது, கேட்பது, முகர்வது, சுவைப்பது ஆகிய புலன்களிலிருந்து தகவல்களைப் பெறுகிறது. இதுவே உணர்ச்சிகளை அனுபவிப்பதும் வெளிப்படுத்துவதுமாகும். இதற்கு உதவுவது ஹைபோதலமஸ் என்ற உறுப்பு. இங்கிருந்து நாளமிவல்லா சுரப்பிகள் உடலின் எல்லாப் பகுதிக்கும் செல்லும்.

ஹைபோதலமஸ் எமக்கு கண்ணீர் வரச்செய்கிறது, வியர்வையை ஏற்படுத்துகிறது. இதய அடிப்பை நெறிப்படுத்துகிறது, உடல் வெப்பத்தை சீராக்குகிறது. இது மட்டுமன்றி நாம் ஓடுவது, விளையாடுவது என எல்லாமே இதன் விளைவுதான்.

லிம்ஃபாடிக் அமைப்பின் செயற்பாடுகளே நியுரோன்களை நெறிப்படுத்தி ஒட்டுமொத்த மூளையையும் மாற்றி விடுகிறது. சிலர் கை கால்களை இழுத்துக் கொண்டு நிலத்தில் விழுந்து புரள்வதைப் பார்க்கலாம். சிலர் கடவுளைக் கண்டுவிட்டதாக புலம்பலாம். உச்ச கட்ட ஆனந்த பரவசத்தில் மிதக்கலாம். ஆழமான ஆன்மிக அனுபவமும், தெய்வீக உணர்வையும் கடவுளோடு நேரடியாகப் பேசுவது போலவே உணர்ச்சியை ஏற்படுத்தலாம்.

எல்லாமே மூளையின் பல்வேறு அற்புதமான செயற்பாடுகளே தவிர வேறொன்றுமில்லை.


Heritage Education Funds

**RESP SAVINGS PLAN**

**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax

Small Business Income Tax

Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



குயின்ரஸ் துரைசிங்கம்

# கொரோனா தந்த பரிசு: குடியும் குடித்தனமுமாய்..!

இந்தக் கொடிய கொரோனா வைரஸ், பல புதிய படிப்பினைகளை வேகவேகமாய்க் கற்றுத் தந்திருக்கிறது. எமது பிள்ளைகளின் வயது எப்படி அதிகரிக்கிறது என்பதைக் கூடப் புரிந்துகொள்ள நேரமின்றி ஓடி ஓடிப் பணம் தேடும் பெற்றோர்களுக்கு, இந்தக் கொடிய நோய், ஒரு புதிய புரிதலைப் புடம் போட்டிருக்கிறது.

பாடசாலை மற்றும் வெளி அலுவல்கள் தவிர, தங்கள் வீட்டில் தங்க நேரும் தருணங்களிலெல்லாம் பிள்ளைகள் தங்களது அறைகளில் அதிக நேரத்தைச் செலவிடுவார்கள். உணவருந்த வரும்படி வருந்தி அழைத்த பின்னர், வேகவேகமாக வந்து உணவருந்திவிட்டு, மீளவும் தங்கள் அறைகளுக்கே சென்று விடுவார்கள். உணவருந்த வரும்போதுகூட, அதிகம் பேச்சு வைத்துக்கொள்ளாது, கைத்தொலைபேசி அல்லது தொலைக்காட்சியில் கவனம் செலுத்தியபடி, பெற்றோரோடு அதிகம் எதையும் பேசாமல், கேட்ட பதினைந்து கேள்விகளில் வெறும் இரண்டு மூன்றிற்கு மட்டும் ஒற்றைப் பதில்களோடு முடித்துக்கொண்டு விடுவது அதிக வீடுகளில் நிகழும் நாளாந்த வாடிக்கை.

இது பிள்ளைகள் விரும்பி ஏற்படுத்திய ஏற்பாடல்ல. இதற்கு பெற்றோரும் ஒரு விதத்தில் காரணமாகி விடுகின்றனர். பிள்ளைகளை உற்சாகப்படுத்தும், பெருமைப்படுத்தும் அல்லது ஆறுதல்படுத்தும் எந்த விடயத்தையும் எடுக்காமல், இவன் முடியைப் பாருங்க, தலையைப் பாருங்க, உடுப்பைப் பாருங்க, கதையைப் பாருங்க என்று கிண்டல் நிறைந்த எரிச்சலூட்டும் விடயங்களையே எப்போதும் பேசுவது, அல்லது கூட்டு, துடை, புல்லை வெட்டு, மொப் அடி என்று வேலை வாங்குவதிலேயே குறியாய் இருப்பது, அல்லது குளிச்சியா, ஒழுங்கா பல்லுத் தீட்டினியா, நகம் வெட்டினியா என்று குறைகூறுவதிலேயே கவனத்தைச் செலுத்துவது என்று பழகிப்போன பெற்றோரின் கதைகளினாலேயே பல பிள்ளைகளும் பெற்றோருடன் செலவிடும் நேரத்தைத் தவிர்க்கின்றனர்.

இப்போது பிள்ளைகள் முழு நேரமாக வீட்டில் இருப்பதால், பிள்ளைகள் வேறு வழியின்றி பெற்றோருடன் கதைக்கின்றனர். பெற்றோரும் சற்று ஓய்வாக இருப்பதனாலும் அதிக நேரத்தைச் செலவிடுவதனாலும், தங்கள் நிலைமையை உணர்ந்து, பல நல்ல விடயங்களையும் மனம் விட்டுப் பேசுகின்றனர். இரு பக்க உறவுகள் வலுவடையும் சூழல் பல வீடுகளில் புதுப்பிறப்பெடுத்திருக்கின்றது. ஒரு சில வீடுகளில் இப்படி அதிக நேரம் செலவிடுவதால் சண்டைகளும் வாக்குவாதங்களும் அதிகரிப்பதாக புகார் வந்தாலும், பரவலாக பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் உரையாடல்களும் உறவுவலு நிலையும் சீராகி வருகிறது.

மறுபக்கத்தில், இலத்திரனியல் உலகின் அதீத வளர்ச்சியால், கொரோனா தொற்றுநோய் காரணமாக நேரில் சந்திக்க முடியாவிட்டாலும், வட்ஸ்அப் அல்லது முகநூல் வழியான ஒருவழித் தொடர்பாடல்களெல்லாம், இப்போது ஹவுஸ் பார்ட்டி (house party), சூம் (zoom), ஹாங்அவுட்ஸ் (hangouts), ஜிற்சிமீட் (Jitsi Meet) போன்ற பல இருவழி வீடியோ தொடர்பாடல்கள் மூலம் உயிரூட்டமுள்ள உறவுப் பரிமாற்றங்களாக, தாராளமாக வீட்டில் கிடைக்கின்ற நேரம் காரணமாக, அன்பும் பாசமும் ஆரோக்கியமும் கலகலப்பும் நிறைந்த சந்திப்புகளாக மாற்றமடைந்திருக்கின்றன.

இலத்திரனியல் உலகில் வீடியோ மூலம் பேசுகின்ற வாய்ப்பு வசதிகள் கடந்த பல வருடங்களாக இலவசமாகக் கிடைத்தாலும், பலருக்கும் கிடைக்காத ஒன்று நேரம். அது தாராளமாகக் கிடைப்பதால், உடலும் மனமும் கவனச் சிதைவில்லாமலும், அவசரமாக வீசப்படும் தவறான வார்த்தைகளின் கனம் தவிர்க்கப்பட்டும், பேச்சு வார்த்தைகள் உறவைச் சீராக்கி வருகின்றன.

நேரம் தாராளமாகக் கிடைப்பதால், பலரும் பல புதிய முயற்சிகளைப் பரீட்சித்துப் பார்க்கிறார்கள். புதிய உணவு வகைகளை, யூ-ரியூப் உதவியுடன், பலரும் சுவையாகச் சமைத்து, வீட்டிலுள்ளோரை ஆச்சரியப்படுத்துகிறார்கள். அதிக உணவை உண்பதாலும், ஆரோக்கியமற்ற பல உணவுகளைச் சுவை பார்ப்பதாலும், உடற்பருமன் கூடுகின்ற சவால் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், வீட்டில் யோகா செய்வோரும், உடற்பயிற்சிகள் செய்வோரும், தற்போதெல்லாம் தங்களது உறவினர் நண்பர்களையும் இலத்திரனியல் வலையத்தில் இணைத்துக்கொண்டு, குரூப் (group) பாக பயிற்சி செய்கிறார்கள். வீட்டிற்கு பெயின்ட் (paint) அடிப்பது, திருத்த வேலைகளை முடிப்பது, துப்பரவு செய்வது, தோட்டங்களை உருவாக்குவது என்று பல ஆரோக்கியமான வளர்ச்சிகளைப் பார்க்க முடிகிறது.

எழுத ஆசைப்பட்டதை எழுதவும், வாசிப்பதற்கு அதிக நேரம் ஒதுக்கவும் பலருக்கு வாய்ப்பான காலமாக இது அமைந்திருக்கிறது. எதுவுமே செய்யாமல், கையில் அகப்பட்டதையெல்லாம் சாப்பிட்டபடி, மதுவுக்கு அடிமையாக மாறி வருகின்ற ஒரு சிலரின் தடுமாற்றம் கவலை தந்தாலும், மிக அதிகமானவர்களின் சாதகமான எழுச்சி எமக்கு ஆறுதல் தருகிறது.

பலரும் தற்போது கரயோக்கி மூலம் பாடல்களைப் பாடி பயிற்சி செய்கிறார்கள். புதிய சமையல் குறிப்புகளையும், தங்களது கல்வித் தகைமைக்கேற்ப பல பயிற்சி வீடியோக்களையும் வெளியிடுகிறார்கள். இவையெல்லாம் மிகச் சிறப்பான வளர்ச்சிகளே. பிரெஞ்ச் போன்ற புதிய மொழியொன்றைப் படிப்பது, புதிய இசைக் கருவியொன்றைப் பயில முற்படுவது போன்றனகூட சிறப்பான நகர்வுகளே.

இவைகளுக்கிடையே, தாங்களும் திடீரென உளவள ஆலோசகர்களாகி, கை கழுவுவது எப்படி, ஹலோ சொல்வது எப்படி, நீராவி பிடிப்பது எப்படி, சமூக இடைவெளியைப் பேணுவது எப்படி என்று புதிய புதிய குறுஞ்செய்திகளையும் குறும்படங்களையும் உருவாக்கி, எந்த உத்தரவுமில்லாது அத்தனை வட்ஸ்அப் குரூப்களிலும் பரவவிடுவதும், அனைவரது முகநூல்களிலும் பகிர்ந்து வருவதும், அவசியமற்றவை.

யாரோ ஏற்கனவே செய்து காட்டியவற்றையெல்லாம், திரும்பவும் புதிதாக தாங்களே உருவாக்கி, திடீர் ஐசக் நியூட்டன்களாகும் விஞ்ஞானிகள், தங்களது நேரத்தை மட்டுமன்றி, அடுத்தவர் நேரத்தையும் விரயமாக்குவதில் வெற்றி கண்டு வருகிறார்கள்.


வீட்டிலிருந்து வேலை செய்வது, இணையவலை மூலம் கல்வி கற்பது, இணையத்தின் ஊடாக பொருட்கொள் - வனவு, வீடியோ தொடர்பாடல் மூலம் நேரடி இருவழித் தொடர்புகள் போன்ற பல புதிய நடைமுறைகள், தற்காலிக தேவைக்கானதாக முன்னர் இருந்தபோதிலும், இனி இவையெல்லாம் நிரந்தர நடைமுறைகளாக வாழ்வியலில் இணைந்து கொள்ளுகின்ற புதிய மாற்றம் கொரோனா வைரஸ் மூலம் சாத்தியமாகியிருக்கிறது.

வீட்டில் குடியும் குடித்தனமுமாய் வாழக்கூடிய பழங்கால வாழ்க்கை நிஜமாகியிருக்கிறது. கடைகளிலே உணவை வாங்குகின்ற வழக்கம் மாறி, இனி வீட்டில் பலதையும் சமைத்துப் பார்க்கின்ற ஆர்வத்தைத் தூண்டியிருப்பதும், வீட்டில் மரக்கறிகளை வளர்க்கும் ஆர்வம் பலரிடம் உருவாகியிருப்பதும், குடும்பத்தில் பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றாக உரையாடவும் உறவாடவும் பிறந்திருக்கின்ற புதிய வாய்ப்புகளும், நாளடைவில் மறைந்து போகாமல் பாதுகாக்கப்படுவது, எம் ஒவ்வொருவர் கைகளிலுமே தங்கியிருக்கிறது என்ற யதார்த்தத்தை நாம் மறக்காதிருப்பதும் அவசியம்.

# நோவாஸ்கோஷியா துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் பலி

நோவாஸ்கோஷியாவில் கடந்த மாத நடுப்பகுதியில் தனியொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் பலியாகினர். ஆர்.சி.எம்.பி. பொலிசாரின் சீருடையில் ஆர்.சி.எம்.பி. இலச்சனைகள் பொருத்திய வாகனத்தில் சென்ற 51 வயதான நபர் வெறித்தனமாக இத்துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார். தொடர்ச்சியாக பதின்மூன்று மணித்தியாலம் நடைபெற்ற இந்த வன்செயலில் ஆர்.சி.எம்.பி.யின் பெண் உத்தியோகத்தர் ஒருவரும் கொல்லப்பட்டார்.











குரு அரவிந்தன்

# ‘பத்மஸ்ரீ’ மகாராஜபுரம் சந்தானம்

மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் பலராலும் அறியப்பட்ட பிரபல கர்நாடக இசைப்பாடகராவார். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்த மண்ணிலும் நன்கு அறியப்பட்டவர். யாழ்ப்பாணம், மருதனாமடத்தில் உள்ள சேர் பொன்னம்பலம் இராமநாதன் இசைக் கல்லூரியின் அதிபராக 1960 தொடக்கம் 1965ஆம் ஆண்டுவரை இவர் கடமையாற்றினார். இவரது இசைத்திற - மையால் கவரப்பட்ட இசை ஆர்வலர்கள் பலரும் அவரிடம் இசை கற்பதற்குச் சென்றனர். அதனால் அவரிடம் முறையாக இசைபயின்ற பல ஈழத்தமிழர் இன்று பிரபல கர்நாடக இசைப் பாடகர்களாக இலங்கையிலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் இருக்கின்றார்கள்.

தமிழ்நாடு சிருனங்குர் என்ற கிராமத்தில் மே மாதம் 20ஆம் திகதி 1928ஆம் ஆண்டு பிறந்த இவர் பிரபல இசைக் கலைஞரான மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் என்ற இசைக்கலைஞரின் மகனா - வார். இசைக் குடும்பத்தில் பிறந்த இவர் மாணவப்பருவத்தில் கருநாடக இசைப் பயிற்சியைத் தனது தந்தையிடமே பெற்றுக் கொண்டார். அதன்பின் மெலட்டூர் சாமா தீட்சிதரின் மாணவராக இருந்து கர்நாடக இசை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார்.

இவரது தந்தையாரும் பிரபல இசைக் கலைஞருமான மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் திரைப்படத்திலும் நடித்திருக்கின்றார். 1935ஆம் ஆண்டு வெளிவந்த பக்தநந்தனார் படத்தில் கே.பி.சுந்தராம்பாள் நந்தனாராகவும், மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் வேதியராகவும் நடித்திருந்தனர். மாணிக்லால் டாண்டன் இயக்கிய இந்த படம் திரையுலகில் பெரிதாக வெற்றி பெறவில்லை. அதன்பின் திரு. வாசன் அவர்கள் செருகளத்தூர் சாமாவை வேதியராகவும், எம்.எம்.தண்டபாணி தேசிகரை நந்தனாராகவும் கொண்டு திரும்பவும் 1942ஆம் ஆண்டு நந்தனார் கதையைப் படமாக்கியிருந்தார்.

மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் ‘போ சம்போ சிவ சம்போ ஸ்வயம்போ’ என்ற சுவாமி தயானந்த சரசுவதி இயற்றிய பாடலைக் கர்நாடக இசையில் ரேவதி ராகத்தோடு பாடியதன் மூலம் மிகவும் பிர- பலமானார். ஒரு காலத்தில் மிகவும் பிர- பலமாகப் பலராலும் பாடப்பட்ட பாடலாக இந்தப் பாடல் இருந்தது. முருகபக்தரான இவர் முருகன் மீது பாடல்களை எழுதி இருக்கின்றார். இதைவிட காஞ்சி



சங்கராச்சாரியார் மகாப்பெரியவாள் ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள் மீதும் பாடல்கள் எழுதியுள்ளார். இந்தப் பாடல்களைவிட ‘மதுர மதுர’ என்ற பாகேஸ்ரீ இராகப் பாடல், ‘உன்னை அல்லால்’ என்ற கல்யாணி இராகப் பாடல், ‘சதா நின் பாதமே கதி’ என்ற சண்முகப்ரியா இராகப் பாடல், ‘ஸ்ரீசக்ர ராஜ‘, ‘நளின காந்தி மதிம்’, ‘க்ஷாராப்தி கன்னிகே’ போன்ற ராகமாலிகா இராகப் பாடல்களும் இவர் பாடிப் பிரபலமான பல பாடல்களில் அடங்கும்.

இவருக்கு 1984ஆம் ஆண்டு சங்கீத நாடக அகாதமி விருது கிடைத்தது. 1989ஆம் ஆண்டு மியூசிக் அகாதமி, சென்னை வழங்கிய சங்கீத கலாநிதி விருது கிடைத்தது. 1990ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது கிடைத்தது. 1991ஆம் ஆண்டு தமிழ் இசைச்சங்கம் வழங்கிய இசைப்பேரறிஞர் விருது கிடைத்தது. ரிசிகேசத்தில் உள்ள யோகா வேதாந்த பல்கலைக்கழகம் அளித்த ‘சங்கீத சுதாகரா’ என்ற விருது, சிருங்கேரி சந்திரசேகர பாரதியால் அளிக்கப்பட்ட ‘கான கலாநிதி’ என்ற விருது, காஞ்சி காமகோடி பீடாதிபதி செயந்திர சரசுவதியால் அளிக்கப்பட்ட ‘சங்கீத சங்கமித்ரா வர்சி’ விருது, தமிழ்நாடு அரசு வழங்கிய கலைமாமணி விருது ஆகியன குறிப்பிடத் தக்கன.

மகாராஜபுரம் சந்தானம் தனக்கு இசை கற்பதற்கான ஆர்வம் வந்ததே ஜி. என். பாலசுப்ரமணியத்தின் ‘எனை மறந்தனன்’ என்று தொடங்கும் காம்போதி விருத்தத்தைக் கேட்ட பிறகுதான் என்று ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இவர் திருமலை திருப்பதி தேவஸ்தானம், காஞ்சி சங்கர மடம், பிட்ஸ்பர்க், பென்சில்வேனியா வெங்கடாசலபதி கோவில் மற்றும் கணபதி சச்சிதானந்த ஆச்சிரமம் ஆகியவற்றில் ஆசுதான வித்வானாகவும் இருந்துள்ளார். இவரது இசைக் கச்சேரிக்கு ஈழத்துக் கலைஞர் கலாபூ‘ணம் ஐ. சிவபாதம் போன்றவர்கள் மிருதங்கம் வாசித்திருக்கிறார்கள். இவரது பிள்ளைகளான மகாராஜபுரம் எஸ். ஸ்ரீநிவாசன் மற்றும் மகாராஜபுரம் எஸ். ராமச்சந்திரன் ஆகிய இருவரும் சிறந்த கர்நாடக இசைப்பாடகர்களாக இருக்கின்றார்கள். இவரது முதன்மை மாணவர் ஆர். கணேஷ் என்பவரும் இவரது இசை பாணியைத் தொடர்ந்து பல அரங்குகளிலும் பாடிவருகின்றார்.

மிகச் சிறந்த கருநாடக இசைக் கலைஞரான மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் 1992 யூன் மாதம் 24ஆம் திகதி திண்டிவனம் என்ற இடத்தில் நடந்த வாகன விபத்தில் காலமானார். இவரின் நினைவாக சென்னை தியாகராய நகரில் இருந்த கிரிபித் சாலை என்ற சாலையின் பெயரை ‘மகாராஜபுரம் சந்தானம் சாலை’ எனப் பெயர் மாற்றம் செய்துள்ளனர். இந்தச் சாலையில்தான் மிகப் பிரபலமான கிருஷ்ணகான சபாவும், முப்பாத்தம்மன் கோவிலும் இருக்கின்றன. இவரது இசைத்திறமையை நினைவு கூரும் முகமாக ‘மகாராஜபுரம் சந்தானம் தினம்’ என்ற பெயரில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி அன்று இசை ஆர்வலர்களால் அனுசரிக்கப்படுகிறது.


Best Catering
நந்தா உணவகம்
NANTHA CATERS
in Town!
நகரில் சுவைகுன்றா உணவுகளுக்கு ஒரே இடம்
Brimley & Steeles - 4915 Steeles Ave. E.
Warden & Finch -3268 Finch Ave. E.
Kipling & Steeles - 5010 Steeles Ave. E.
416 NANTHA 1 (416 626 8421)


வீடு வாங்க... விற்க... உங்கள் பிரதிநிதி
Rave P. Raveenthiran
Sales Representative
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Dir: 416-567-2462
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
ravehomes@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS


ATTIC INSULATION
கோடை காலத்தில் குளிராக்கும் செலவினை குறைக்கவும்
குளிர் காலத்தில் வெப்பமாக்கும் செலவினை குறைக்கவும்
கூரை உக்குதல், பூஞ்சணம் பிடித்தல் போன்றவற்றை தடுக்கவும்
பரண் (ATTIC) உள்ளீடு செய்திடுங்கள்!!!
Stay Warm in Winter. Be Cool in Summer.
Spray Foam Insulation
Attic Walls
Ceiling Garage
Crawl Space
SuPa. Raventhiran
416-847-7171
ENERecon Insulation

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**






- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



BRACE FOR A GREAT SMILE

# DR. ILLANGO & ASSOCIATES

ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT

Dental Office

**SCARBOROUGH**
Kennedy / Finch Ave.
3852 Finch Ave. East
Suite 204 & 303
Scarborough, ON
Tel: 416-292-7004

**BRAMPTON / MISSISSAUGA**
Steeles / Hurontario
7920 Hurontario Street
Unit # 37
Brampton, ON
Tel: 905-457-1700

**MARKHAM**
Markham / 16th Ave.
(New Location)
9500 Markham Road
Unit # 107
Markham, ON
905-47 BRACE (27223)



முருகேசு பாக்கியநாதன்

# தமிழ், தமிழ்மொழி, தமிழர்கள், தமிழ்க் கலாசாரம், தமிழ்ப் பண்பாடு - 2

தமிழ் - திரமிழ் - திரமிழம் - திரமிழ - திரமிட - திராவிட - என்றாகி டாகடர் றொபேட் கால்டுவெல் அவர்களால் திராவிட **Dravida, Dravidian** என்று அழைக்கப்பட்டது.

தமிழ் என்பதன் திரிபே திராவிடம் என்றாகத் திரிக்கப்பட்டு வடமொழியாரால் பாவிக்கப்பட்டது என்பதே உண்மையாகும். வருங்காலங்களில் திராவிடம் என்ற பதத்தை மறப்போம், அதனைத் தமிழ் என்றே எழுதுவோம், பேசுவோம். வடமொழியாரின் வாயினுட் புகாத தமிழ் என்ற சொல் சங்கம் மருவிய காலத்தே சமணர்களால் 'திரமிட சங்க" என்ற சொல்லில் இருந்து அது பதிவாகத் தொடங்கியது. திரமிட சங்கம் என்னும் ஒரு அமைப்பை அவர்கள் தோற்றுவித்து தமது சமயத்தைப் பரப்புவதற்காக அங்கு தமிழைப் பயின்றார்கள். இதிலிருந்தே அச்சொற்பாவனை தமிழில் கலந்ததெனலாம். இதுபற்றி தகைசார் பேராசிரியர் கா. சிவத் - தம்பி அவர்கள் தனது 'பண்டைத் தமிழ் சமூகம்' என்னும் நூலில் "சமண, பௌத்த சமயச் செல்வாக்குகள் பற்றிக் கூறும்போது குறிப்பாக சமணர்கள் வழியாக வந்த கல்வி வளர்ச்சியையும் கூறிச் சொல்லுகிறார். அந்த வளர்ச்சியினை கி.பி 468-49 ற்குரிய திரமிழ சங்கத்தோடு இணைத்து நோக்குகிறார். அதுவும் ஆழமாக நோக்க வேண்டியதொன்றாகும்." (பக் XLI) என்று கூறுகின்றார்.

இவ்வகையான பயன்பாடு சமணர்கள் தமிழ் நாட்டிற்கு வரமுன்பே வடநாட்டில் வழக்கில் இருந்துள்ளது. அதனை அடிப்படையாக வைத்து ஒரு சில வடநாட்டு அறிஞர்கள் திரமிழம் என்பதன் திரிபே தமிழ் என்று அழைக்கப்பட்டது என்று வாதிட்டனர். முன்னூறாண்டுகளுக்கு முன்பு சுப்பிரமண்ய தீட்சிதர் என்பவர் இயற்றிய "தமிழ் பிரயோக விவேக நூல்" என்னும் நூலில் முதன் முதலில் இக்கருத்தினைப் புகுத்தி விட்டார் என்று பேராசிரியர் இரா. இராகவஜயங்கார் அவர்கள் தனது 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார் - பாகம் 14. மேலும் அவர் கூறுகையில், இவ்வாறு அவர் துணிந்து கூறுவதற்கு தலையாய காரணம் தமிழையும், தமிழரையும் த்திரமிழ என்னும் சப்தத்தால் வட நூல்களில் வழங்கிக் காட்டலேயாகும். த்ரவிடம் என்னும் சொல் திரமிடம், த்ரமிளம், தமிளம் எனச் சிறிது சிறிதாக திரிபு பட்டு முடிவில் தமிழ் என்றாயிற்று என்பதே இக்கொள்கையோர் கருத்தாகும். அதன் உண்மைத் தன்மையினை அவர் மேலும் நோக்கும்போது கால்டுவெல் அவர்களின் கருத்தினையும் நோக்குவது சிறந்ததாகும்.

கால்டுவெல் அவர்களின் ஆரம்பகாலக் கருத்தும் பின்னரான கருத்தும்.

தமிழ் என்னும் பதத்திற்கு திரவிட என்பதே மூலம் என்ற கருத்தை முன்வைத்தவர்களுள் கால்டுவெல் அவர்களும் ஒருவராவர். இவரும் த்ரவிட என்பது திரமிட என்றாகி அது நாளடைவில் த்ரமிள ஆகத் திரிந்து பின்னர் தமிள, தமிழ் என்றாகியதென்று 1856இல் வெளிவந்த முதற்பதிப்பு "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (Comparative Grammar of Dravidian Languages) என்ற அவரது நூலில் குறிப்பிட்டுள்ளார். பின்னர் 1975இல் வெளியிடப்பட்ட இரண்டாவது பதிப்பில் இவர் தனது தவறினைத் தெளிவுற உணர்ந்து தனது முந்திய கருத்தினை மாற்றிக் கொண்டு தமிழ் என்பதே திரிபடைந்து த்ரமிட என்றாகியது என்ற முடிவினை வெளியிட்டார். அத்தோடு திராவிட மொழிக் குடும்ப மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற இதர மொழிகளுக்கும் தாய் மொழி தமிழே என்றும் அதிலிருந்தோ ஏனைய மொழிகள் திளைத்தன என்றும் குறிப்பிடார்.

ஏன் திராவிடம் (**Dravidian**) என்னும் சொற்பயன்பாட்டைத் தெரிவு செய்தார்.

"The word I have chosen is Dravidian, the adjective from Dravida. This term, it is true sometimes been used, and is still sometimes used, in almost as restricted a sense as that of Tamil itself, so that though on the whole it is the best term I can find. I admit that it is nor perfectly free from ambiguity. It is a term, however, which has already been used more or less distinctively by Sanskrit philologist, as a generic application for South Indian peoples and their Languages, and it is the only single term they seem ever to have used in this manner. I have therefore, no doubt of propriety of adopting it". – Comparative Grammar of Dravidian Languages: page 5.

திராவிடன் என்னும் சொல்லை ஏன் தெரிவு செய்தேன் என்றால் அது திராவிடன் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த திராவிட என்ற சார்பெழுத்தினால் பாவிக்கப்படுவதனாலாகும் அது உண்மையில் பாவனையில் இருந்துள்ளது. அச்சொல் தமிழுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சொல்லாகும். எனக்கு அச்சொல்லைப் பயன்படுத்துவது மாற்றுக் கருத்துக்கு இடமில்லாமல் பயன்படுத்துவது சரியென்றுபட்டது. அச்சொல்லானது சமஸ்கிருத மொழியியலாளர்களால் தென்இந்திய மக்களுக்கும் அவர்களது மொழிகளுக்கும் பயன்படுத்தப்பட்ட ஒரு பொதுவான சொல்லாக இருந்தது. இந்த வகையில் தென்னிந்திய மொழிகளுக்குப் பயன்படுத்தக்கூடிய ஒரே சொல்லாக திராவிடம் என்ற பதம் பொதுவாக இருந்ததனால் அதனைப் பயன்படுத்தினேன். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். பக் 5.

இன்னும் வரும்..

**உசாத்துணை**


1. கலித்தொகை - சி.வை.தாமோதரம்பிள்ளை பதிப்பு
2. தமிழ் வரலாறு - ரா. இராகவையங்கார்
3. பண்டைத் தமிழ்ச் சமூகம் - தகைசார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
4. பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும் - மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர்
5. செவ்வியல் தமிழ் வரலாறும் பண்புகளும் - தகைசார் பேராசிரியர் அ. சண்முகதாஸ்
6. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்.
7. தொல்காப்பியம் - பொருளதிகாரம்.

# மருத்துவ அவசரகால ஏற்பாடு

MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

## Markham McNicoll Urgent Care Centre (MMUCC)

* வழமை போல எல்லா நாட்களும் திறந்திருக்கும்
* நீங்கள் வருவதற்கு முன் 416-609-3333 (எமது கிளினிக் தொலைபேசி) எண்ணில் அழைத்துப் பேசிய பின்னரே வரவேண்டும்.
* சிலரின் சிகிச்சை தொலைபேசி ஊடாகவே நிறைவேற்றப்படும். அவர்கள் நேரில் வரவேண்டியதில்லை.
* "கொரணா" அறிகுறியுள்ளோர் தயவு செய்து "Telehealth Ontario" (டெலிஹெல்த் ஒன்றாரியோ) ஐ 1-866-797-0000 என்ற எண்ணில் அழைக்கவும்.
* எமது கிளினிக்கில் "கொரணா" வைரசை சோதிக்கவோ, சிகிச்சையளிக்கவோ வசதிகள் இல்லை.

## Markham McNicoll Family Care Clinic (MMFCC)

* வழமை போல ஞாயிறு & விடுமுறைதவிர்ந்த எல்லா நாட்களும் திறந்திருக்கும்
* நீங்கள் வருவதற்கு முன் 416-292-6666 (எமது கிளினிக் தொலைபேசி) எண்ணில் அழைத்துப் பேசிய பின்னரே வரவேண்டும்.
* சிலரின் சிகிச்சை தொலைபேசி ஊடாகவே நிறைவேற்றப்படும். அவர்கள் நேரில் வரவேண்டியதில்லை.
* Dr. Nusrat Khan புதிய நோயாளர்களை ஏற்றுக் கொள்கிறார்.
* "கொரணா" அறிகுறியுள்ளோர் தயவு செய்து "Telehealth Ontario" (டெலிஹெல்த் ஒன்றாரியோ) ஐ 1-866-797-0000 என்ற எண்ணில் அழைக்கவும்.
* எமது கிளினிக்கில் "கொரணா" வைரசை சோதிக்கவோ, சிகிச்சையளிக்கவோ வசதிகள் இல்லை.

**2901 Markham Road, Scarborough, ON M1X 0B6**
**www.medcentrehealth.com**



HOMELIFE
HIGHER STANDARDS
15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
416.568.4301
HomeLife/Future Realty Inc.,
Brokerage
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
BBA, LLB, LLM
Real Estate Law
VettyvelLaw
Professional Corporation
416.261.1544




வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..
கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்
(Mortgage) அடமான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்
2018 100% Club Award
2017 Diamond Club Award
2016 Diamond Club Award
2015 Platinum Club Award
2015 Rookie of the Year
கமல் நவரட்ணம்
Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
RE MAX Community Realty Inc.
Brokerage
Office: 416-287-2222
Fax: 416-2824488
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Independently Owned and Operated
Trusted and reliable services